செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-5-4

(108)



மீ ப சோமு

<u>பகுப்பும் தொகுப்பும்</u>
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/111.%20%20%E0%AE%AE%E0%AF%80.%E0%AE%AA.%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AF%81_1921

செந்தமிழ்சிற்பிகள்

மீ.ப.சோமு (1921 – 1999)



அறிமுகம்

ஒரு தமிழ் எழுத்தாளர். மீ. ப. சோமு என்பது இவரது புனைப்பெயர். இவர் பத்திரிக்கை, கவிதை, புதினம், சிறுகதை, கட்டுரை, இசை போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர்.1962ல் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

வாழ்க்கைக் குறிப்பு

சோமு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தவர். சென்னை பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசையியல் படித்து வித்வான் பட்டம் பெற்றவர். இவர் புதுமைப்பித்தனின் நண்பர்.

1938ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றார். அவர் 1946ல் இளவேனில் என்ற அவரது கவிதைத் தொகுப்பு வெளியானது. அக்கவிதைத் தொகுப்பு மாநில அரசின் விருது பெற்றது. 1954 – 56களில் கல்கி தமிழ்ப் பத்திரிக்கையின் ஆசிரியராக பணி புரிந்தார். 1958-60 களில் நண்பன் என்ற மாத இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வானொலியில் பணியாற்றி 1981 இல் ஓய்வு பெற்றார். அங்கு தலைமைத் தயாரிப்பாளராகவும் பண் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றினார். அவரது பயணக் கட்டுரை அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள் 1962ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. அவர் எண்ணற்ற கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மற்றும் இசை ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தமிழ்க்கலைக்களஞ்சியத்திலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சோமு 1999ல் மரணமடைந்தார்.

விருதுகள்


சாகித்திய அகாதமி விருது – பயணக்கட்டுரை: அக்கரைச்சீமையில் ஆறு மாதங்கள்.

தமிழக அரசு விருது – கவிதைத் தொகுப்பு: இளவேனில்.

இசைப்பேரறிஞர் விருது,
1980. வழங்கியது: தமிழ் இசைச் சங்கம், சென்னை.

(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)

தமிழிசை இயக்கம்



சோமு தொடர்கதை, கல்கி

மீ.ப.சோமு தமிழிசை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பண்ணிசை ஆராய்ச்சியில் இறுதிவரை ஈடுபட்டிருந்தார். அகில இந்திய வானொலியின் பண்ணிசை ஒருங்கிணைப்பாளராகவும் ஓய்வுக்குப்பின் தமிழகப் பண் ஆராய்ச்சி மையத்தின் கௌரவ இயக்குநராகவும் பணியாற்றினார். ஏராளமான தமிழிசைப்பாடல்களை எழுதியிருக்கிறார்.அவை இன்றும் மேடையில் பாடப்படுகின்றன.

இலக்கிய வாழ்க்கை

தொடக்கம்

மீ.ப.சோமு நெல்லையில் படிக்கும்போதே டி.கே.சிதம்பரநாத முதலியார் திருநெல்வேலியில் தன் வீட்டில் நடத்திவந்த வட்டத்தொட்டி என்னும் இலக்கியக் கூடுகையில் பங்கெடுத்தார். அங்கே கல்கி, ராஜாஜி ஆகியோர் அறிமுகமானார்கள். மீ.ப.சோமுவின் முதல் கதை 1937-ல் இவருடைய 16 வயதில் ஆனந்த

விகடன் இதழில் வெளியானது. இவர் எழுதிய கவிதைக்கு ஆனந்தவிகடன் பரிசும் பாரதி பதக்கமும் கிடைத்தது.

கவிதை

மீ.ப.சோமு தொடர்ந்து மரபுக்கவிதைகளை எழுதத்தொடங்கினார். குடிகாட்டு வேழமுகன் வெண்பா மாலை', 'திருக்குற்றாலப் பாட்டு ஆகிய மரபுஇலக்கியப் படைப்புகள் டி.கே.சிதம்பரநாத முதலியார், அ.சீனிவாசராகவன் ஆகியோரால் பாராட்டப்பட்டன. முதல் கவிதை தொகுதி இளவேனில் 1946-ல் வெளிவந்தது. தமிழக அரசின் சிறந்த கவிதைநூலுக்கான பரிசை அது பெற்றது. தொடர்ந்து தாரகை', 'பொருநைக் கரையில்', 'வெண்ணிலா ஆகிய தொகுதிகள் வெளிவந்தன. மீ.ப.சோமு நாமக்கல் கவிஞர் மரபு எனப்படும் பாரதிக்குப் பிந்தைய கவிதை மரபுடன் அடையாளப்படுத்தப்படுபவர். நேரடியான எளியமொழி, சந்தம், எளிய யாப்பு கொண்ட கவிதைகள் இவை.

இலக்கியக் குழு

மீ.ப.சோமு திருநெல்வேலியை மையமாக்கித் திகழ்ந்த ஓர் இலக்கியக் குழுவைச் சேர்ந்தவர். நீதிபதிமகாராஜன், அ.சீனிவாசராகவன், தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், மு. அருணாசலம் ஆகியோர் அதில் இருந்தனர். மீ.ப.சோமு ராஜாஜியுடன் இணைந்து திருமூலரின் திருமந்திரப் பாடல்களுக்கும் ஆழ்வார்களின் பாசுரங்களுக்கும் உரை எழுதினார். புதுமைப்பித்தனுக்கு நண்பராக விளங்கிய மீ.ப.சோமுவுக்கு புதுமைப்பித்தன் எழுதிய கடிதங்கள் நூல்வடிவம் கொண்டிருக்கின்றன. புதுமைப்பித்தனின் தேர்ந்தெடுத்த சிறுகதைகளை மீ.ப.சோமு நேஷனல் புக் டிரஸ்ட் அமைப்புக்காக தொகுத்து நூலாக்கினார். எஸ். வையாபுரிப் பிள்ளையுடன் நெருக்கம் கொண்டிருந்த மீ.ப.சோமு கலைக்களஞ்சியப் பணிகளிலும் பங்கெடுத்தார்.

பயணக்கட்டுரை

மீ.ப.சோமு விகடன்,கல்கி இதழ்களில் மரபுக்கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், பயணக்கட்டுரைகள் எழுதினார். சே.ப. நரசிம்மலு நாயுடு, ஏ.கே.செட்டியார், சோமலே (சோமசுந்தரம் லெட்சுமணன்), ஆகியோருடன் சோமுவும் தமிழ் பயண இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்படுகிறார். மீ.ப.சோமு 1962-ல் தன் பயண இலக்கிய நூலான அக்கரைச்சீமையில் நூலுக்காக சாகித்ய அக்காதமி விருது பெற்றார்.

புனைகதை

மீ.ப.சோமு நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதினார்.சோமுவின் புகழ்பெற்ற நாவல் 'ரவிச்சந்திரிகா'

சொற்பொழிவு

மீ.ப. சோமு மிகச்சிறந்த சொற்பொழிவாளராக அறியப்பட்டவர். வானொலியிலும் ஏராளமான உரைகளை ஆற்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஆற்றிய உரைகள் வானொலித் தொகுப்புகளாக உள்ளன. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், கம்பராமாயணம், தமிழிசை இயக்கம் ஆகியவை பற்றி உரையாற்றினார்.

இலக்கிய இடம்

மரபுவழிப்பட்ட விழுமியங்களை, பொதுவாசகர்களுக்காக முன்வைத்து எழுதப்பட்டவை மீ.ப.சோமுவின் புனைவுப் படைப்புகள். இவற்றிலுள்ள புனைவுத்தன்மையும் மரபு சார்ந்தது. அவற்றின் உரைநடை மட்டுமே நவீனத்தன்மை கொண்டது. நவீன இலக்கியத்திற்கும் பொதுவாசிப்புக்குரிய எழுத்துக்கும் தேவையான புதுமை அம்சம் இல்லாதவை மீ.ப.சோமுவின் கதைகள். எளிமையான சீரான மொழிநடையும், மேலோட்டமான சித்தரிப்புத்தன்மையும் கொண்டவை. மீ.ப.சோமுவின் கவிதைகள் எளிமையான நடையும் சந்தமும் கொண்டவை, கவிதைக்குரிய புதுமையம்சம் இல்லாதவை.

ஆகவே புனைகதையாசிரியராகவும், கவிஞராகவும் மீ.ப.சோமு விமர்சகர்களால் கருத்தில்கொள்ளப்படவில்லை

மீ.ப.சோமுவின் கொடை என்பது அவருடைய தமிழிசைப்பாடல்கள் மற்றும் சித்தரிலக்கியத்தின் மீதான ஆய்வு ஆகியவற்றுக்காகவே. சித்தர்பாடல்களின் மறைஞான உள்ளடக்கத்தை பல்வேறு நாட்டாரியல், சிற்பவியல், வழிபாட்டுமுறைக்கூறுகளுடன் இணைத்து அவர் பொருள்கொள்ள முயன்றது பிற்கால ஆய்வாளர்களுக்கு முன்னோடியாக அமைந்தது.

விருதுகள், பட்டங்கள்

- சாகித்ய அகாடமி விருது - 1962 (அக்கரைச்சீமையிலே)
- ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு
- தமிழக அரசு விருது - 1946 (இளவேனில்)
- இசைப்பேரறிஞர் விருது - 1980, தமிழ் இசைச் சங்கம், சென்னை

நூல்கள்

கவிதை

- இளவேனில்
- குடிகாட்டு வேழமுகன் வெண்பா மாலை
- திருக்குற்றாலப் பாட்டு
- தாரகை
- பொருநைக் கரையில்
- வெண்ணிலா

சிறுகதை

- கேளாத கானம்
- உதய குமாரி
- மஞ்சள் ரோஜா
- மனை மங்களம்
- கல்லறை மோகினி
- திருப்புகழ் சாமியார்
- ஐம்பொன் மெட்டி
- வீதிக்கதவு

நாவல்

- ரவிச்சந்திரிகா
- கடல் கண்ட கனவு
- நந்தவனம்
- வெண்ணிலவுப் பெண்ணரசி
- எந்தையும் தாயும்

கட்டுரை

- கார்த்திகேயனி
- ஐந்தருவி
- பிள்ளையார் சாட்சி
- நீங்காத நினைவுகள்
- சித்தர் இலக்கியம் (3 பகுதிகள்)[1]
- நமது செல்வம்
- அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்

"சித்தர் இலக்கியச் செம்மல்' மீ.ப. சோமு

திருப்பூர் கிருஷ்ணன்

https://s-pasupathy.blogspot.com/2016/06/4.html

ஜூன் 17. மீ.ப.சோமு அவர்களின் பிறந்த தினம். தினமணியில் 2011-இல் வந்த ஒரு கட்டுரை இதோ!

===============

திருநெல்வேலிப் பகுதியில் பிறந்து இலக்கியத்தைக் கணிசமாக வளர்த்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் பலர் தமிழில் உண்டு. தொ.மு.சி.ரகுநாதன், வல்லிக்கண்ணன், டி.கே.சி., தி.க.சிவசங்கரன் என வளரும் அந்தப் பட்டியலில் அமரர் சோமுவும் இணைகிறார். திருநெல்வேலி சந்திப்பின் அருகிலுள்ள மீனாட்சிபுரம்தான் அவரது சொந்த ஊர். பிறந்த தேதி 17.6.1921.

சிறுகதை எழுதும் சிலருக்கு நாவல் எழுத வருவதில்லை. நாவல் எழுதுபவர்களிலும் சிலருக்குச் சரித்திர நாவல் எழுத வருவதில்லை. (அதனாலேயே சரித்திர நாவல் இலக்கியமல்ல என்று சொன்ன

எழுத்தாளர்களும் தமிழில் உண்டு) மீ.ப.சோமு சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, பயண இலக்கியம் என இலக்கியத்தின் பல துறைகளில் முயன்று எழுதி வெற்றிபெற்ற மிகச் சில சாதனையாளர்களுள் ஒருவர்.

சோமு இயல்பிலேயே ஆன்மிக நாட்டம் மிகுந்தவர். தமிழின் பக்தி இலக்கியத்தில், குறிப்பாக சித்தர் பாடல்களில் தோய்ந்த பக்தர் அவர். நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்திகள் என்ற புகழ்பெற்ற தேவார இசைமணி, திருமதி சோமுவின் பெரியப்பா.

இளைஞராக இருந்தபோதே எழுத்தார்வம் கொண்டு நிறைய எழுதினார். ஆனால் பரவலாக அவர் அறியப்பட்டது, விகடன் வழங்கிய "பாரதி தங்கப் பதக்கம்' அவரது சிறுகதைக்குக் கிடைத்தபோதுதான்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்வான் பட்டம் பெற்ற வகையில், முறையாகத் தமிழ் கற்ற தமிழ்ப் பண்டிதரும்கூட. மு.வரதராசன், நா.பார்த்தசாரதி போன்றோர் வரிசையில் பழந்தமிழ் அறிந்து, தற்கால இலக்கியத்தில் சாதனை படைத்தவர்.

சம்ஸ்ருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை பெற்றவர். வெளிதேச இலக்கிய அமைப்புகளில் தமிழிலக்கியம் குறித்து ஆங்கிலச் சொற்பொழிவுகள் செய்திருக்கிறார். அவரது ஆங்கிலச் சொற்பொழிவுகளின் பெருமை பற்றி "தி டைம்ஸ்' என்ற ஆங்கில நாளேடு வியந்து பாராட்டிக் கட்டுரை எழுதியதுண்டு.

தமிழில் அநாயாசமான சொல் வளத்தோடு தெளிந்த நீரோடைபோல் சொற்பொழிவாற்றக் கூடியவர். அகில இந்திய வானொலியில் பணிபுரிந்ததாலோ என்னவோ, அவரிடம் ஒரு வித்தியாசமான ஆற்றல் இருந்தது. பேசத் தொடங்குவதற்கு முன் அமைப்பாளர்களிடம் எத்தனை நேரம் பேசவேண்டும், அரைமணி நேரமா, இருபத்தைந்து நிமிடமா என்றெல்லாம் விசாரித்துக் கொள்வார். மேடையேறினால் கைக்கடிகாரத்தைப் பார்க்காமலே

மிகச் சரியாகக் குறித்த நேரத்தில் முடித்துவிடுவார். அவரது அந்த ஆற்றல் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுண்டு.


"சித்தர் இலக்கியச் செம்மல்' என்று குறிப்பிட வேண்டுமானால் தமிழில் மீ.ப.சோமுவைப் பற்றி மட்டும்தான் அப்படிக் குறிப்பிட முடியும். திருமூலரின் திருமந்திரம் உள்பட ஏராளமான சித்தர் பாடல்கள் அவருக்கு மனப்பாடம். சிலப்பதிகாரம் குறித்து ம.பொ.சி. பேசிக் கேட்கவேண்டும் என்று சொல்வதுபோலவே, சித்தர் பாடல் பற்றி மீ.ப.சோமு பேசிக் கேட்க வேண்டும் என்றும் சொல்வதுண்டு. அவர் சித்தர் பாடல்களை விளக்கிப் பேசினால், அந்தத் தமிழின் குளுமையைப் பருகவென்றே ஏராளமான கூட்டம் வருவதுண்டு.



கொஞ்ச காலம் வானொலியில் பணிபுரிந்துகொண்டே கல்கி வார இதழிலும் ஆசிரியராக இருந்தார். (1954 முதல் 1956 வரை). இவர் வானொலியில் வகித்தது, தென் மாநிலங்களுக்கான தலைமை அமைப்பாளர் என்ற பெரிய பதவி.

கல்லறை மோகினி, திருப்புகழ்ச் சாமியார், கேளாத கானம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளின் ஆசிரியர். கடல் கண்ட கனவு உள்ளிட்ட பல நாவல்களை எழுதியவர். இவரது "ரவிச்சந்திரிகா' நாவல் ஏராளமான வாசகர்களால் பாராட்டப்பட்டு, பெரும்புகழ் பெற்ற நாவல். தொலைக்காட்சித் தொடராகவும் பின்னர் அது வெளிவந்தது.

தத்துவச் சிந்தனை சார்ந்த மரபுக் கவிதைகளைப் படைப்பதில் வல்லவர். அந்த வகையில் இவரது இளவேனில் கவிதைத் தொகுதி குறிப்பிடத்தக்கது. பிள்ளையார் சுழி, நமது செல்வம் முதலிய கட்டுரைத் தொகுதிகளின் ஆசிரியரும்கூட. பற்பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்.



மீ.ப.சோமு, தம் சமகாலத்தில் வாழ்ந்த இருபெரும் ஆளுமைகளுடன் நெருங்கிப் பழகும் பேறுபெற்ற பெருமைக்குரியவர். ஒருவர் மூதறிஞர் ராஜாஜி. இன்னொருவர் கம்பன் புகழ்பாடும் டி.கே.சி. ராஜாஜியின் கடைசிப் பதினைந்து ஆண்டுகளில் பெரும்பாலும் அவரது இரவு உணவு சோமு வீட்டில்தான்.

மீ.ப.சோமு எழுதிய நாடகங்கள் பல பிரபலமானதற்கு, அவரது தமிழால் கவரப்பட்டு டி.கே.எஸ். சகோதரர்கள் அவற்றை மேடை ஏற்றியதும் ஒரு முக்கியக் காரணம்.

பல பரிசுகள் இவர் எழுத்தாற்றலைத் தேடி வந்தன. இவரது "அக்கரைச் சீமையிலே' என்ற பயண நூலுக்கு சாகித்ய அகாதெமி பரிசு கிடைத்தது. படைப்பிலக்கியம் அல்லாத நூலுக்கு அகாதெமி பரிசு கொடுத்ததைப் பற்றி எப்போதும் போல், அப்போதும் சில

விமர்சனங்கள் எழத்தான் செய்தன. ஆனால் ஏ.கே.செட்டியார், மீ.ப.சோமு போன்றோர்தான் தமிழ்ப் பயண இலக்கியத்தின் முன்னோடிகள் என்பதை விமர்சித்தவர்களே கூட மறுக்கவில்லை.

எம்.ஏ.எம். அறக்கட்டளைப் பரிசு, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு, தமிழக அரசுப் பரிசு, பல்கலை வித்தகர், இசைப் பேரறிஞர் போன்ற பட்டங்கள் என இவரது பெருமைகள் இன்னும் பல.

சிக்கனம்பாறை ஆசிரமத்தைச் சேர்ந்த கண்ணப்ப சுவாமிகள் என்ற சித்தர்தான் இவரது குரு. சித்தரிடம் நேர்முகமாக ஆன்மிகப் பயிற்சிகளைக் கற்றார். உடலில் உள்ள பல மையங்களில் மனத்தை ஒருமுகப்படுத்தி மானசீக பூஜை செய்யும் பயிற்சியும் அவற்றில் ஒன்று. அந்த பூஜையை நாள்தோறும் விடாமல் செய்துவந்தார். அக்காலத்தில் பெரும் பதவிகளில் இருந்த பலர் மீ.ப.சோமுவிடம் மந்திர உபதேசம் பெற்றவர்களும் கூட.

தம் ஒரே மகளுக்கு தமது நன்றியறிதலைத் தெரிவிக்கும் வகையில், வித்தியாசமான பெயரொன்றை வைத்தார் சோமு. சிதம்பர ராஜ நந்தினி என்பது மகளின் பெயர். முதல் வார்த்தை டி.கே.சி.யையும் இரண்டாம் வார்த்தை ராஜாஜியையும் மூன்றாம் வார்த்தை கல்கியையும் ஞாபகப்படுத்துவது. (சோமுவின் புதல்வி ராஜாஜியின் மடியில் வளர்ந்த செல்லக் குழந்தையும் கூட). உயர் நீதிமன்ற வழக்கறிஞரான எஸ்.கோமதிநாயகம் மீ.ப.சோமுவின் மாப்பிள்ளை.

தம் மனைவி காலமானபோது வயோதிகத்தால் தளர்ந்திருந்த சோமு, சற்று விரக்தி அடைந்தார். ஆனாலும், இறுதிக் காலங்களில் பண் ஆராய்ச்சி மையத்தின் கௌரவ இயக்குநராகப் பதவி வகித்துப் பணியாற்றத் தொடங்கினார். "தமிழே என்னை விட்டு என்றும் பிரியாத என் நிரந்தரத் துணை' என்று அவர் நெகிழ்ச்சியுடன் சொல்வதுண்டு. 1999-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் தேதி ஒரு பொங்கல் திருநாளையொட்டி அவர் மறைந்தார். ஆனால், என்றும் மறையாத தமது எழுத்துகளில் அவர் வாழ்கிறார்.

மீ.ப. சோ

https://siliconshelf.wordpress.com/2025/02/13/%E0%AE%AE%E0%AF%80-%E0%AE%AA-%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AF%81/



சோமு (மீ. ப. சோமசுந்தரம்) சாஹித்ய அகடமி விருது பெற்ற எழுத்தாளர். **அக்கரைச் சீமையிலே** என்ற பயண நூலுக்காக 1962-இல் அவருக்கு விருது தரப்பட்டது. ஆனால் என் கண்ணில் இந்தப் புத்தகத்துக்கெல்லாம் விருது தரப்பட்டிருக்கக் கூடாது. அந்தக் காலத்தில் இந்த வருஷம் இவருக்குக் கொடுப்போம் என்று தீர்மானித்துக் கொண்டு பிறகு என்ன புத்தகத்துக்குக் கொடுக்கலாம் என்று தேடி இருக்கிறார்கள். கஷ்ட காலம்! இப்படி தராதரம் இல்லாமல் சாஹித்ய அகடமி விருதை தமிழில் என்னவோ நீ பிடிச்சுக்கோ நீ பிடிச்சுக்கோ என்று தூக்கிப் போட்டிருப்பது பெரிய அநியாயம்.

என் கண்ணில் **நமது செல்வம்** என்ற ஒரே புத்தகம்தான் சோமுவின் கொடை. தமிழ்நாட்டின் பல கலைச் செல்வங்களை அழகாக விவரிக்கிறது. தமிழ் விக்கி அவர் சித்தர் பாடல்களில் ஆய்வு, தமிழிசைப் பாடல்கள் ஆகியவற்றை மெச்சுகிறது. எனக்கு சித்தர் பாடலைப் படித்து ரசிக்கும் அளவுக்கெல்லாம் அறிவு கிடையாது, அதனால் நமது செல்வம் புத்தகம் ஒன்றை மட்டுமே பரிந்துரைப்பேன். (அதற்கும் சாஹித்ய அகடமி விருது எல்லாம் தரக் கூடாது, நேஷனல் புக் ட்ரஸ்ட் வழியாக பிற மொழிகளில் மொழிபெயர்க்கலாம்.)

சோமு 1921-இல் பிறந்தவர். வானொலியில் பெரிய பதவியில் இருந்திருக்கிறார். கல்கி ஆசிரியராக சில காலம் பணியாற்றி இருக்கிறார். டிகேசி குழுமத்தில் முக்கியமானவர். ராஜாஜிக்கும் கல்கிக்கும் நெருக்கமானவர். அவருடைய கருத்துக்கள் இன்று சுவாரசியப்படவில்லைதான், ஆனால் இலக்கிய ஆர்வலர்தான். சிறுகதை என்ற தலைப்பில் அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரைகளைக் குறிப்பிடலாம். சிறுகதை ஏன் தோன்றுகிறது, அதன் பொருள் என்ன, அதன் வடிவம் எப்படி என்று சொற்பொழிவாற்றி இருக்கிறார். ரசிகர் என்பது தெளிவு. அவர் குறிப்பிட்ட ஒரு பாடல் அருமை.

இல்லென்பார் தாம் அவரை யாம் அவர்தம் பேர் அறியோம்
பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக்
கொல் என்று காமனையும் கண்காட்டி கோபுரக்கீழ்
நில் என்று போனார் என் நெஞ்சை விட்டுப் போகாரே!

யார் எழுதிய பாடல் என்று அவர் என்று சொல்லவில்லை. இந்தப் பாடலை என் தலைமுறையினர் நேரடியாக அனுபவித்திருப்பார்கள். கொல் என்று காமனையும் கண்காட்டி என்பது மிக அருமை...

ரவிசந்திரிகா (1956) அவர் கல்கியில் எழுதிய தொடர்கதை. அன்று விரும்பிப் படிக்கப்பட்டிருக்கலாம். இன்று நாவலின் நடுவே வரும் நாடோடிப் பாடல்கள்தான் ஒரே சுவாரசியம். புல்லாங்குழல் நிபுணன் ரவீந்திரன் ரயிலில் பிச்சை எடுத்துப் பாடும் சந்திரிகா என்ற சிறு பெண்ணை எடுத்து வளர்க்கிறான், நடனம் கற்றுத் தருகிறான். இருவருக்கும் நடுவில் மெல்லிய ஈர்ப்பு. புலம்பும் ரவீந்திரன் மனைவி கல்யாணி, சிலம்பம் கற்றுத் தரும் உஸ்தாத் மீரான், மலைவாழ் பழங்குடியினர் என்று பல பாத்திரங்கள்.

ரவிசந்திரிகாவுக்கு ***ராஜாஜி*** ஒரு முன்னுரை எழுதி இருக்கிறார். புத்தகத்தைப் படிக்கவே இல்லையாம். முன்னுரை எழுத ஆசிரியரைத் தெரிந்திருந்தால் போதாதா, எதற்காகப் படிக்க வேண்டும் என்று வேறு கேட்கிறார். என்னத்தைச் சொல்ல!

https://www.hindutamil.in/news/blogs/195949-10.html

மீ.ப.சோமசுந்தரம்



ராஜலட்சுமி சிவலிங்கம்

தமிழ் படைப்பாளி, பத்திரிகையாளர்

பிரபல தமிழ்ப் படைப்பாளியும் பத்திரிகையாளருமான மீ.ப.சோமசுந்தரம் (Mi.Pa.Somasundaram) பிறந்த தினம் இன்று (ஜூன் 17). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சி புரத்தில் (1921) பிறந்தவர். பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழில் வித்வான் பட்டம் பெற்றார். அகில இந்திய வானொலியில் 40 ஆண்டு காலம் பணியாற்றினார். தென் மாநிலங் களுக்கான தலைமை அமைப்பாளர், பண் ஆராய்ச்சி ஒருங்கிணைப் பாளராகப் பணியாற்றினார்.

* இளம் பருவத்திலேயே நல்ல எழுத் தாற்றல் பெற்றிருந்தார். 'ஆனந்த விகடன்' இதழில் இவரது சிறு கதைக்கு தங்கப் பதக்கம் கிடைத்த

பிறகு, சிறந்த படைப்பாளியாகப் புகழ்பெற்றார். 'கல்கி' இதழின் ஆசிரியராக 2 ஆண்டுகள் பணி யாற்றினார். 'நண்பன்' என்ற மாத இதழைத் தொடங்கி நடத்தினார்.

* தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதத்தில் புலமை பெற்றிருந்தார். சர்வதேச இலக்கிய அமைப்புகளில் தமிழ் இலக்கியம் குறித்து ஆங்கிலத்தில் உரையாற்றி, தமிழின் பெருமைகளைப் பரப்பினார். பல நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு, அந்த அனுபவங்களை பயணக் கட்டுரைகள், நூல்களாகப் படைத்தார்.

* சொல்வளம், சரளமான பேச்சுநடையால் சிறந்த சொற்பொழிவாளராகப் பிரபலமானார். சிறுகதை, நாவல், நாடகம், பயண இலக்கியம், கவிதை, இசை ஆய்வுக் கட்டுரை என இலக்கியத்தின் அனைத்துக் களங்களிலும் முத்திரை பதித்தவர். தமிழ்க் கலைக் களஞ்சிய வெளியீட்டிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

* தத்துவச் சிந்தனை சார்ந்த மரபுக் கவிதைகள் படைப்பதில் வல்லவர். ராஜாஜி, டி.கே.சி. ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றார். இவர் புதுமைப்பித்தனின் நெருங்கிய நண்பர். இவரது நாடகங்கள் டி.கே.எஸ். குழுவினரால் மேடையேற்றப்பட்டு பிரபலமடைந்தன.

* கல்லறை மோகினி', 'திருப்புகழ் சாமியார்' ஆகிய சிறுகதைத் தொகுப்புகள், 'கடல் கண்ட கனவு', 'நந்தவனம்' உள்ளிட்ட நாவல்கள், 'இளவேனில்' போன்ற கவிதைத் தொகுப்புகள், 'ஐந்தருவி', 'பிள்ளையார் சாட்சி' போன்ற கட்டுரைத் தொகுதிகள், 'அக்கரை சீமையிலே' என்ற பயண நூல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பெரும் வரவேற்பைப் பெற்ற 'ரவிசந்திரிகா' நாவல், தொலைக்காட்சித் தொடராகவும் வந்தது.

* ஆன்மிகத்திலும் இளம் வயது முதலே நாட்டம் கொண்டிருந்தார். திருமூலரின் திருமந்திரம் உட்பட ஏராளமான சித்தர் பாடல்கள்

இவருக்கு தலைகீழ் பாடம். சித்தர் பாடல்களில் ஆழ்ந்த அறிவும், ஞானமும் பெற்றவர்.

* அதில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. 'சித்தர் இலக்கியச் செம்மல்' எனப் போற்றப்பட்டார். சிக்கனம்பாறை கண்ணப்ப சுவாமிகள் என்ற சித்தரிடம் ஆன்மிகப் பயிற்சிகளைக் கற்றவர். தொடர்ந்து அவற்றைப் பயிற்சி செய்து வந்தார். இசையிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

* சாகித்ய அகாடமி விருதை 1962-ல் பெற்றார். எம்ஏஎம் அறக்கட்டளை பரிசு, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பரிசு, தமிழக அரசு விருது உட்பட பல விருதுகள், பரிசுகளைப் பெற்றுள்ளார். பல்கலை வித்தகர், இசைப் பேரறிஞர் உள்ளிட்ட பட்டங்களையும் பெற்றார். பண் ஆராய்ச்சி மையத்தின் கவுரவ இயக்குநராகவும் செயல்பட்டார்.

* இறுதிக் காலத்திலும்கூட தமிழ் இலக்கியத்தில் பண் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்தார். 'தமிழ் மட்டுமே என்னை என்றும் பிரியாத நிரந்தரத் துணை' என்று கூறுவார். இறுதி வரை தமிழுக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் மகத்தான பங்களிப்புகளை வழங்கிவந்த மீ.ப.சோமசுந்தரம் 78-வது வயதில் (1999) மறைந்தார்.

மீ.ப.சோமு

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%AE%E0%AF%80-%E0%AE%AA-%E0%AE%9A%E0%AF%8B%E0%AE%AE%E0%AF%81/

மீ. ப. சோமசுந்தரம் (Mi. Pa. Somasundaram; 17 சூன் 1921 – 15 சனவரி 1999) ஒரு தமிழ் எழுத்தாளர். மீ. ப. சோமு என்பது இவரது

புனைபெயர். இவர் பத்திரிக்கை, கவிதை, புதினம், சிறுகதை, கட்டுரை, இசை போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கியவர். 1962ல் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றவர். அகில இந்திய வானொலியில் பணியாற்றியவர்.

வாழ்க்கைக் குறிப்பு

சோமு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தவர். சென்னை பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசையியல் படித்து வித்வான் பட்டம் பெற்றவர். இவர் புதுமைப்பித்தனின் நண்பர்.

1938ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றார். அவர் 1946ல் இளவேனில் என்ற அவரது கவிதைத் தொகுப்பு வெளியானது. அக்கவிதைத் தொகுப்பு மாநில அரசின் விருது பெற்றது. 1954 – 56களில் கல்கி தமிழ்ப் பத்திரிக்கையின் ஆசிரியராக பணி புரிந்தார். 1958 -60 களில் நண்பன் என்ற மாத இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வானொலியில் பணியாற்றி 1981 இல் ஒய்வு பெற்றார். அங்கு தலைமைத் தயாரிப்பாளராகவும் பண் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றினார். அவரது பயணக் கட்டுரை அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள் 1962ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. அவர் எண்ணற்ற கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் இசை ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தமிழ்க்கலைக்களஞ்சியத்திலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சோமு 1999ல் மரணமடைந்தார்.

விருதுகள்

சாகித்திய அகாதமி விருது – பயணக்கட்டுரை: அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள்.
தமிழக அரசு விருது – கவிதைத் தொகுப்பு: இளவேனில்.
இசைப்பேரறிஞர் விருது,
1980. வழங்கியது: தமிழ் இசைச் சங்கம், சென்னை.

சிறுகதைகள்

கேளாத கானம்
உதய குமாரி

ஐம்பொன்மெட்டி
மஞ்சள் ரோஜா
மனை மங்களம்
கல்லறை மோகினி
திருப்புகழ் சாமியார்

புதினங்கள்

ரவிச்சந்திரிகா
கடல் கண்ட கனவு
நந்தவனம்
வெண்ணிலவுப் பெண்ணரசி
எந்தையும் தாயும்


வாழ்க்கைக் குறிப்பு

சோமு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தவர். கோவில் தேவார ஓதுவார்கள் மரபில் தோன்றியவர். இளமையில் வாய்ப்பாட்டுடன் வீணையும் சாரங்கியும் பயின்றார். சென்னை பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசையியல் படித்து வித்வான் பட்டம் பெற்றவர். டி. கே. சியுடனான தொடர்பு மூலம் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டார். இவர் புதுமைப்பித்தனின் நண்பர். 1938ல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றார். அவர் 1946ல் *இளவேனில்* என்ற அவரது கவிதைத் தொகுப்பு வெளியானது. அக்கவிதைத் தொகுப்பு மாநில அரசின் விருது பெற்றது. 1954 – 56களில் கல்கி இதழின் ஆசிரியராகப் பணி புரிந்தார். 1958 -60 களில் *நண்பன்* என்ற மாத இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வானொலியில் பணியாற்றி 1981 இல் ஓய்வு பெற்றார். அங்கு தலைமைத் தயாரிப்பாளராகவும் பண் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றினார். இவரது சாகித்தியங்கள் பல வானொலியில் ஒலிபரப்பாயுள்ளன. அவரது பயணக் கட்டுரை *அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள்* 1962ன் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. அவர் எண்ணற்ற கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் மற்றும் இசை ஆய்வுக் கட்டுரைகளும்

எழுதியுள்ளார். தமிழ்க்கலைக்களஞ்சியத்திலும் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. சோமு 1999ல் மரணமடைந்தார்.

விருதுகளும் பட்டங்களும்

- சாகித்திய அகாதமி விருது - பயணக்கட்டுரை: *அக்கரைச்சீமையில் ஆறுமாதங்கள்*.
- தமிழக அரசு விருது - கவிதைத் தொகுப்பு: *இளவேனில்*.
- இசைப்பேரறிஞர் விருது, 1980. வழங்கியது: தமிழ் இசைச் சங்கம், சென்னை.
- பல்கலை வித்தகர், தருமை ஆதீனம்
- முத்தமிழ்ச் செல்வர், யாழ்ப்பாணம் ஆதீனம்












அஞ்சலி


https://keetru.com/index.php/2018-01-12-06-00-39/2014-03-08-04-40-53/2014-03-14-11-17-81/18563-2012-02-06-04-27-45

தமிழில் பயண இலக்கியங்கள்!

ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி

நாகரிகத்தின் தொட்டில் எனப் போற்றப்படுவது ‘கிரேக்கம்’. அங்கே தோன்றிய ஹோமரே, ‘ஆதிகவி’ என்று அழைக்கப்படுகின்றார். அவர் எழுதியவை, ‘இலியது’, ‘ஒதிசிய’’ என்ற இரு பெருங்காவியங்கள். ட்ராய் நகரை முற்றுகையிட்ட கிரேக்கத் தலைவர்களுள் ஒருவனான

ஒதிசியஸ் என்பவன், தன்னுடைய நாடான இதாகா தீவுக்குத் திரும்ப முற்பட்டு, பத்து ஆண்டுகளாகக் கடல் வெளியெல்லாம் அலைந்து, பற்பல இன்னல்களுக்கு ஆளாகி, கடைசியில் தன் தாய்நாடு சேர்ந்த கதையை, 'ஒதிசிய' கூறுகிறது. ஆகவே, ஒருவகையில் இதை, காப்பியப் பாங்கில் அமைந்த புராதன காலப் பயண இலக்கியம் என்று உலக இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் போற்றுகின்றார்கள்.



1835ல் தான், இந்தியர்கள் அச்சுப் புத்தகங்களை வெளியிட்டுக் கொள்ள வெள்ளையர்கள் அனுமதி அளித்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில், தமிழ்நாட்டில் அதற்கு முன் வந்த புத்தகங்கள் அனைத்தும், கிருத்துவ மதப் பாதிரியார்கள் வெளியிட்டவையே. ஆகவே, தமிழின் சங்க இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் எல்லாமே 1840 முதல் 1980க்குள் வெளிவந்தவைகளே.

புரட்சிக்கவிஞர்களுள் முதல் கவியாகிய பாரதியின் காலத்திற்குப் பிறகே, நவீன இலக்கியங்களின் வகையான சிறுகதை, நாவல், புதுக்கவிதை, கட்டுரை இலக்கியம், பயண இலக்கியம் எல்லாம் முழு வீச்சுடன் வெளிவரத் தொடங்கின. முதல் நாவல், 1878ல் வெளி

வந்திருந்தாலும், அவை முழுமையான உள்ளடக்கம், உருவத்தோடு வரத் தொடங்கியது சென்ற நூற்றாண்டில்தான்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்; இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்; அவற்றை வெளிநாட்டார் வணக்கஞ்செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்க முயற்சித்தவர்கள், மணிக்கொடி எழுத்தாளர்கள். மணிக்கொடி இதழில் புதுக்கவிதை, ஏராளமான சிறுகதைகள், பல்வேறு நாட்டு இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள், கட்டுரை இலக்கியங்கள் எல்லாம் வந்தன. ஆனால் பயண இலக்கியக் கட்டுரைகள் வரவில்லை. காரணம், 'பயணக் கட்டுரைகள் இலக்கியமாகா' என்பதே மணிக் கொடிக்காரரான சி.சு.செல்லப்பா போன்றோரின் கருத்து.

175 ஆண்டுகாலமாகத் தமிழ்ப் புத்தக வெளியீட்டு வரலாற்றில், பயண இலக்கியங்கள் உண்டா? என்ற கேள்வியைப் பலர் எழுப்புகின்றார்கள்.

'பயண இலக்கியத்தின் தந்தை' எனவும், 'உலகம் சுற்றிய தமிழன்' எனவும் போற்றப்படும் ஏ.கே. செட்டியார் அவர்கள், 1968 ஆம் ஆண்டு, தான் வெளியிட்ட 'தமிழ்நாடு - பயணக் கட்டுரைகள்' என்ற நூலின் முகவுரையில், 'தமிழில் பயண இலக்கியமே இல்லை என்று மற்றவர்களைப் போல் எண்ணியிருந்தேன். அது முற்றிலும் தவறு என்பதை, இந்நூலைத் தொகுக்கும் அரியதொரு பணியில் ஈடுபட்டபொழுது உணர்ந்தேன்' என்கிறார். 1850 முதல் 1965 வரை வெளியான பயணக் கட்டுரைகளின் தொகுப்பே ஏ.கே. செட்டியாரின் 'தமிழ்நாடு'.

உலகம் சுற்றிய தமிழர் ஏ.கே.செட்டியாரின் முதல் நூல் 'ஜப்பான்'. 1936ல் இரங்கூனில் வெளியிட்டார். அந்நூலின் முன்னுரையில், 'ஒரு நாட்டைப் பற்றி எழுதுவதென்றால், அந்த நாட்டில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் தங்கி, அந்நாட்டு மொழியை நன்கு பயின்று, அந்நாட்டு மக்களோடு நெருங்கிப் பழகுதல் வேண்டும். நான் ஜப்பானில் தங்கியிருந்தது, சுமார் ஒரு மாதந்தான். நுனிப்புல்லை

மேய்வது போன்ற இந்நிலையில், நான் அதிகம் எழுத முடியாது என்றாலும், ஜப்பானைப் பற்றித் தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தாலேயே இந்நூலை எழுத முன் வந்தேன்' என்று குறிப்பிட்டு உள்ளார். மதுரையில் பிறந்தவர்கள், மீனாட்சி அம்மன் கோயிலையும், நாயக்கர் மகாலையும் பார்க்காமல் இருக்கின்றார்கள். தென்காசிக்காரர்களுள், குற்றாலம் செல்லாமல் இருப்பவர்களும் உண்டு. தமிழகத்தின் பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் மலைகளையும் காணாமல் வாழ்பவர்களும் உண்டு.

இதைப்பற்றி மிகுதியாகக் கவலைப்படுகின்ற தோழர் அருணகிரி அவர்கள், இந்த நூலின் முன்னுரையில், 'இப்படி எத்தனையோ பேர் தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்கின்ற பகுதியைப் பற்றிக்கூட முழுமையாக அறிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்த வேண்டும், பயணம் செய்யத்தூண்ட வேண்டும் என்பதே எனது எழுத்தின் நோக்கம்' என்கிறார்.

பாரதியில் இருந்து சுஜாதா வரை எல்லோரும் வார, மாத இதழ்களில் தொடராக எழுதி பின்னர் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்கள். 'உலகம் சுற்றிய தமிழர்' ஏ.கே.செட்டியாரின் 18 நூல்களுள், ஒன்றிரண்டு நூல்களைத் தவிர, மற்ற அனைத்து நூல்களுமே நேரிடையாக வெளியிடப்பட்டவையாகும். அவரை அடுத்து தோழர் அருணகிரி அவர்கள்தான், தன் பயண அனுபவங்களை நேரிடையாக நூலாகவே வெளியிடுகின்றார். இது அவரது தன்னம்பிக்கையைக் காட்டுகின்றது. உண்மையிலேயே இது மிகப்பெரும் சாதனையாகும்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், 'இந்திய திவ்ய தேச யாத்திரை' (A Travellers Companion) என்ற தலைப்பில், தமிழின் முதல் பயண நூலை வெளியிட்டவர், சேலம் பகடலு நரசிம்ம நாயுடு. பன்மொழிப் புலவர். இவர், கோவையில் 'கலாநிதி' என்ற இதழை நடத்தி வந்தார். 1889 ஆம் ஆண்டு, ஜனவரி 30 ஆம் நாள் மேற்கண்ட நூலை இரண்டு

பாகங்களாக வெளியிட்டார். அதே நூலை, 1913 ஆம் ஆண்டு ஒரே பதிப்பாக ஆக்கி வெளியிட்டார்.

இன்றைக்கு 73 ஆண்டுகளுக்கு முன்னர், 'மரகதத் தீவு' என்று வர்ணிக்கப்படும் இலங்கைக்குப் பயணம் செய்து, தன் அனுபவங்களை 'ஆனந்த விகடன்' இதழ்களில் 05.06.1938 முதல் 02.10.1938 வரை சுவைபட எழுதினார் அமரர் கல்கி. கல்கியை அடுத்து ஆனந்த விகடனில் ஆசிரியராக இருந்த தேவன், 'ஐந்து நாடுகளில் அறுபது நாட்கள்' என்ற தொடரை எழுதினார்.

கல்வித்துறையில் பணியாற்றிய சு.காந்திமதி, 'அமெரிக்கா அழைக்கிறது' என்ற தலைப்பில், ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆனந்த விகடனில் தொடராக எழுதினார்.

அறுபதுகளில், 'அக்கரைச் சீமையில் ஆறு மாதம்' என்ற தலைப்பில், இங்கிலாந்து பயண அனுபவங்களை, மீ.ப. சோமு கல்கியில் தொடராக எழுதினார். பின்னர் அது புத்தகமாகவும் வந்தது.


எழுபதுகளில் கி.வா. ஜகந்நாதன், 'கண்டறியாதன கண்டேன்' என கலைமகள் மாத இதழில் தன் மேல்நாட்டுப் பயண அனுபவங்களைத் தொடர் கட்டுரைகளாக வெளியிட்டார். அதுவும் நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ்த் தென்றல் திரு.வி.க, மு.வ, கல்கி, கி.வா.ஜ, பகீரதன் முதலானோர் தங்களது இலங்கைப் பயணம் பற்றி கட்டுரைகளாகவும், நூலாகவும் வெளியிட்டுள்ளார்கள்.

'இதயம் பேசுகிறது' என்ற தலைப்பில், மணியன், ஆனந்த விகடனில் பல அயல்நாட்டுப் பயணக் கட்டுரைகளை, தொடர்ந்து பல ஆண்டுகளாக எழுதி வந்தார். பரணீதரன் ஆன்மிகப் பயணங்களை எழுதினார். கடந்த 30 ஆண்டுகளாக, எந்த வார, மாத இதழ்களிலும் பயணத் தொடர்கள் வருவதில்லை.

ஏ.கே. செட்டியாருக்குப் பின் அருணகிரி

உலகம் சுற்றிய தமிழர் ஏ.கே. செட்டியார், அவரை அடுத்து சோமலெ, இவர்கள் இருவரையும் தவிர்த்து, திட்டமிட்டுப் பயணங்களை மேற்கொண்டு, அவற்றைத் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி நூலாக வெளியிட்டுக்கொண்டு இருப்பவர்களுள், இன்று தோழர் அருணகிரியைத் தவிர வேறு யாரும் இல்லை.



இந்த நாட்களில் பலர் பல்வேறு தேசங்களில் பிரயாணம் செய்து விட்டு வருகின்றார்கள். ஆனால் எமர்சன் சொன்னதுபோல, 'யார் எங்கே போனால்தான் என்ன? தங்களையும் சுமந்து கொண்டுதானே போகிறார்கள், தங்களை மீறி நகர்ந்து விட முடிவதில்லையே?'

இப்படிப்பட்டவர்கள் பிரயாணம் செய்வதால், அவர்களுக்கு ஒரே ஒரு லாபம்தான். நான் அங்கே போனபோது' என்று ஆரம்பித்து, 'வேண்டாம் விடுமையா' என்று சொன்னாலும், ஓடுபவனையும் துரத்திப் போய்த் தங்கள் பேச்சை முடிப்பார்கள்.

அப்படி இல்லாமல், ‘தன் பிரயாணங்களைப் பற்றி ரத்தினச் சுருக்கமாகச் சொல்லியுள்ள ஒரே ஆசிரியர் நம்முடைய அருணகிரி' என்று, க.நா.சு பாணியில் சொல்லத் தோன்றுகின்றது.

பயணம் தொடங்கும்போது ஏற்பட்ட கஷ்டங்களையும், திரும்பும்போது தமிழகம் வரப் போராடியதையும், மிகவும் சிறப்பாக தனக்கே உரிய பாணியில் எழுதி உள்ளார். பயணம் மேற்கொள்பவர்கள், குறிப்பாக வெளிநாடு செல்ல விரும்புபவர்கள், என்னென்ன ஆவணங்களைக் கொண்டு போக வேண்டும்? அவற்றை எவ்வாறு, எங்கே பெற வேண்டும்? என்பதையெல்லாம் விவரமாகச் சொல்வதோடு, ‘குறைந்த சுமை, நிரம்ப இன்பம்' என்பதை நினைவூட்டி, எடுத்துச் செல்லும் பெட்டியில் சக்கரங்கள் பொருத்தப்பட்டு இருப்பது நல்லது; குளிர்நாடுகளில் அந்நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ற உடைகளை எடுத்துச் செல்வது எவ்வளவு பயன் உடையது என்பதையும், விளக்கமாக நமக்கு அறிவுறுத்துகின்றார்.

‘ஆல்ப்ஸ் மலையில் அருணகிரி' என்ற இந்த நூலில், நோர்வே, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஃபிரான்ஸ் ஆகிய நான்கு நாடுகளில் பயணம் மேற்கொண்டதை விவரிக்கின்றார். நேரில் சென்று பார்க்கின்ற அனுபவத்தின் நன்மையையும், மகிழ்ச்சியையும், அருணகிரி எழுதும்போது, இன்னும் கொஞ்சம் எழுத மாட்டாரா? என்று நம்மை நினைக்கச் செய்கிறது.

எங்கு சென்றாலும், எதைப் பார்த்தாலும் அவருக்கு உடனே தமிழ்நாடு, தமிழர்கள் நினைவுக்கு வந்து விடுகின்றார்கள். யான் பெற்ற இன்பத்தை, என் தமிழ் நாட்டு மக்கள் பெற வேண்டாமா என ஏக்கப் பெருமூச்சு விடுவதை பல பக்கங்களில் கேட்க முடிகிறது.

‘நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு

நண்பகலில் சூரியன் மறையும் நாடு’

என்ற தலைப்பில், நோர்வேயைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே படிப்பவர் உள்ளத்தைத் தன் பக்கம் ஈர்த்து, நாம் படித்திராத, கேள்விப்பட்டிராத பல்வேறு விஷயங்களை நமக்குத் தருகிறார் ஆசிரியர்.

'நோர்வே நாட்டில், சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம்', பிரதமரும் அப்படித்தான். அவரும் வரிசையில் நிற்பதைக் காண முடியும். ஒரு முறை பிரதமரின் பாதுகாப்புக்காக குண்டு துளைக்காத கார் ஒன்று வாங்கத் தீர்மானித்தார்கள். 'அவருக்கு மட்டும் என்ன அப்படி ஒரு பாதுகாப்பு? அவரது உயிர் மட்டும் உயர்ந்ததா? வாங்கினால், எல்லோருக்கும் குண்டு துளைக்காத கார் கொடுங்கள்' என்று மக்கள் சொல்லவும் அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்களாம். நோர்வேயில் தனிமனித பாதுகாப்பு குறித்து எந்தக் கவலையும் இல்லை என்கிறார் அருணகிரி.

அவர் சார்ந்த இயக்கம், அவரது தலைவர் வைகோ வழியில், எங்கு சென்றாலும் ஈழத் தமிழர்களின் நல்லன்பையும், விருந்தோம்பலையும், அவர்களின் கடின முயற்சி, அயராத உழைப்பு இவற்றையெல்லாம் மிக அழுத்தமாகவே பதிவு செய்துள்ளார்.

"நோர்வீஜியர்கள், தங்கள் நாட்டின் உயர்வுக்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர்கள், புகழ் சேர்த்தவர்களை மதித்துப் போற்றுகின்றார்கள்; அதனால்தான், விமானங்களில் வால் பகுதியில் அவர்களுடைய படங்களை வரைந்து இருக்கின்றார்கள். நோர்வீஜியர்கள் அதிகம் வாசிக்கின்றார்கள்; வாசிப்பதையும் ஊக்குவிக்கின்றார்கள். 'நொர்லி' என்ற புத்தகக் கடையின் முகப்பில், நோர்வேயின் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் படங்கள் அலங்கரித்துக் கொண்டு இருந்தன. அதற்கு முன்பாக நின்று படங்கள் எடுத்துக் கொண்டேன். பத்து விரல்களையும் பயன்படுத்துங்கள்" எனக் கூறும் அருணகிரிக்குப் படிப்பதில் உள்ள ஆர்வம் அவரோடு பழகிய அனைவரும் அறிந்த ஒன்று என்றாலும், வாசகர்களுக்கு அதைத் தெரிந்து கொள்ள உதவுகிறது மேலே உள்ள செய்தி.

‘நோர்வேயில் தமிழர்கள்' என்பதை விரிவாக விளக்கமாக எழுதி இருக்கின்றார். தான் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகை என்ன? அங்கு வாழும் ஈழத் தமிழர்கள் தொகை என்ன? அவர்களுள் எவ்வளவு பேர் குடி உரிமை பெற்றவர்கள்? அவர்கள் அங்கு எந்த ஆண்டு முதல் குடியேறத் தொடங்கினார்கள் என்பதையெல்லாம் ஒன்று விடாமல் புள்ளி விவரங்களை எல்லாம் தரும்போது, எப்படி இத்தனைத் தகவல்களையும் இவர் திரட்டினார் என ஆச்சரியமாக இருக்கின்றது.

‘ஒரு நாட்டை ஒரு பருவத்தில் மட்டும் பார்த்துவிட்டு எழுதுவது முழுமை பெறாது. ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரையில் ஓராண்டு தங்கி இருந்து எழுதுவதே முழுமை பெறும்' என்று அருணகிரி எழுதும்போது, ஏ.கே. செட்டியார் சொன்ன, ‘ஒரு நாட்டைப் பற்றி எழுத, அந்நாட்டில் இரண்டு ஆண்டுகளாவது இருக்க வேண்டும்' என்பது நினைவுக்கு வருகிறது.

‘இனி பயண நூல்களை எழுதுபவர்கள், அதைப் பார்த்தேன் இதைப்பார்த்தேன் என்று இயற்கைக் காட்சிகளை விவரிப்பதோடு நின்று விடாமல், அந்த நாடுகளின் மக்கள் மனநிலை என்ன? வாழ்க்கைத்தரம் என்ன? எவ்வளவு செலவு ஆகின்றது? என்பதையும் குறிப்பிட்டு எழுதினால்தான், அது முழுமையான பயண நூலாகவும், அதைப் படித்துவிட்டுப் பயணிப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையும்' என அருணகிரி வலியுறுத்துவதை யாரும் மறுக்க முடியாது.

ஜெர்மனி நாட்டுப் பயணத்தில் அவர் பார்த்ததை எழுதுகிறார்.

'ஜெர்மனியிலேயே பவேரியா, ரைன்லாண்ட், பிரஷ்யா என ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனிக்கொடி உண்டு. ஆனால் ஒவ்வொரு கிராமத்துக்கும் கூடத் தனிக்கொடி இருக்கிறது என்பதை நேரில் பார்த்தேன்'

'இந்தியாவில் மாநிலங்கள் கூடத் தனிக்கொடி அமைக்கின்ற வழக்கம் இல்லை. ஆனால் காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டும் அரசியல் சட்டப்படியே தனிக்கொடி உண்டு. கர்நாடக மாநிலத்திலும் கன்னடக் கொடி ஏற்றுகின்ற வழக்கம் இருக்கின்றது. அதுபோல, புலி, வில், கயல் பொறித்த கொடியை வடிவமைத்து, தமிழ்நாட்டின் அரசுக் கொடியாக அறிவித்து நாமும் ஊர்தோறும் ஏற்ற வேண்டும்' என்கிறார் அருணகிரி.

சென்னை ரிப்பன் கட்டிடத்தில் புலி, வில், கயல் பொறித்த கொடி ஏற்றி இருந்தார்கள். அறுபதுகளில் நான் பார்த்திருக்கின்றேன். அருணகிரியின் கோரிக்கை நியாயமானது. நிறைவேற தமிழர்கள் முயற்சிக்க வேண்டும்.

அருணகிரியின் சுவிட்சர்லாந்து பயணத்தின் நோக்கமே, ஆல்ப்ஸ் மலையின் உயர்ந்த சிகரங்களில் ஏறிப் பார்ப்பதே. அவரின் நோக்கம் எவ்வாறு நிறைவேறியது என்பதை மிகவும் புளகாங்கிதத்தோடு விவரிக்கின்றார்.

பாரீஸ் பட்டணத்தின் ரயில்வே ஸ்டேஷன், அருணகிரிக்குச் சென்னையை நினைவுபடுத்துகிறது. ஈஃபெல் இரும்புக் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தபோது, உலகின் உயர்ந்த கட்டுமானங்களைப் பற்றி அவர் அறிந்த செய்திகளையும் நினைவுக்குக் கொண்டு வந்து நமக்குக் காட்டுகிறார். மோனாலிசா ஓவியத்தை நேரில் பார்க்க முடியவில்லையே என்ற வருத்தத்தை, அவர் தன் கட்டுரை மூலம் போக்கி விடுகின்றார்.

பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் எதையெடுத்தாலும் போட்டிதான். கூடுமானவரையில் ஆங்கிலம் பேசுவதைத் தவிர்த்து வந்த பிரெஞ்சுக்காரர்கள், இப்போது ஆங்கிலம் பேசப் பயில்கிறார்கள் என்று ஒரு புதிய செய்தியைக் கூறுகிறார் அருணகிரி. ஐரோப்பியப்

பிச்சைக்காரர்களைப் பற்றி அருணகிரி தெரிவிக்கின்ற செய்திகளைப் படிக்கும்போது, நாம் வியப்பில் ஆழ்கிறோம்.

பயண நூல்களில் படங்கள் மிகவும் முக்கியம். 50 படங்களுக்கும் மேல் இடம் பெற்று இருப்பது, ஆசிரியரின் தாராள மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு.

நான் இந்த ஊரில்தான் பிறந்தேன், வளர்ந்தேன், படித்தேன், வேலை பார்க்கிறேன், வீடுண்டு, ஆபிஸ் உண்டு என்று பெருமையடித்துக் கொள்பவர்களும் நமது நாட்டில் இருக்கின்றார்கள். தமிழர், தமிழ்நாட்டையாவது ஒருமுறையாவது சுற்றிப் பார்க்க வேண்டும். இந்நூலைப் படிப்பவர்கள் அவ்வாறு செய்வார்களேயானால், ஆசிரியர் அருணகிரியின் நோக்கம் நிச்சயம் நிறைவேறிவிட்டது என்று சொல்லலாம்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்பதை, ஆசிரியர் அருணகிரி நமக்கு நினைவுபடுத்துகின்றார், ஒவ்வோர் பயணத்திலும். வாழ்க அருணகிரி! வளர்க அவரது தமிழ்த் தொண்டு!!

"நான் மரம் பேசுகிறேன்!"

https://www.vikatan.com/literature/arts/68381-article-about-green-revolution-and-tree

"**ம**ழை, நிழல் மட்டுமல்ல... பறவைகளுக்கு வசிப்பிடமும், கால்நடைகளுக்குத் தழையும், மனிதர்களுக்குச் சகலமும் தருகிறேன். மண்ணரிப்பையும் தடுக்கிறேன். இப்படி

எல்லோருக்கும் எல்லாமும் தரும் என்னை, ஏன் வெட்டுகிறார்கள் என்றுதான் புரியவில்லை. ஒவ்வோர் ஆண்டும் புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் அழிந்துவிடுகிறேன். அது இயற்கை. அதை, மாற்ற முடியாது. ஆனால், சாலை விரிவாக்கம், வீடு கட்டுதல், உயர் அழுத்த மின்பாதை கோபுரம் அமைத்தல் போன்ற காரணங்களால் என்னை அகற்றுகிறார்களே... அதை, எங்கே போய்ச் சொல்வது? என் பயன் அறியாத சில மானிட ஜென்மங்கள், போராட்டம் என்ற பெயரில் என்னை வெட்டிச் சாய்க்கின்றன. இப்படித் தினந்தோறும் நான் அழிக்கப்படுவதால், சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது... வெப்பச்சலனம் ஏற்படுகிறது... மழைப்பொழிவு குறைகிறது. இதற்கு எல்லாம் யார் காரணம்? நீங்கள்தானே... இப்படி என்னைப்பற்றிச் சொல்ல இன்னும் நிறைய இருக்கின்றன. இதையெல்லாம் சொல்வது யாராக இருக்கலாம் என்று நீங்கள் யோசிக்கலாம். ஆம்... நான் மரம்தான் பேசுகிறேன்.

''என்னைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கலாமே?''

என்னை (மரம்) நடும் விழா ஒன்றில் அமைச்சர் தலைமையில், என் இன சகநண்பர்கள் 100 பேர் அங்கே நடப்பட்டனர். சில மாதங்கள் கழித்து, 'என் சகநண்பர்களில் எத்தனை பேர் பிழைத்திருக்கின்றனர்' என்று உதவியாளரிடம் கேட்டார் அமைச்சர். 'நடப்பட்டவர்கள் 100 பேர்... செத்தவர்கள் 101 பேர்' என்றார் உதவியாளர். 'அது எப்படி?' என்று கேட்ட அமைச்சரிடம், 'எங்களை நடுவதற்கு 100 பேரை (கிளைகளை) வெட்டியதில், இருந்த மொத்த (மரமும்) பரம்பரையும் செத்துவிட்டது' என்றாராம் உதவியாளர். இப்படித்தான், என்னை நடும் விழா என்ற பெயரில், உயிரோடு இருக்கிற எங்களைச் சாகடிக்கும் நிகழ்வுகள் அரசியல்வாதிகளால் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. 'நீரின்றி அமையாது உலகு' என்று சொல்கிறோமே தவிர, அதற்கு மூலகாரணமாய் இருக்கும் என்னை வளர்க்கக் கவனம் செலுத்துவது இல்லை. இன்றைய காலகட்டத்தில் என்னை நடுவதற்குக் குரல்

கொடுப்பதற்குப் பதிலாக, நன்றாய் இருக்கிற என்னைக் காப்பாற்றவாவது நடவடிக்கை எடுக்கலாமே?

பிரபலங்களின் பசுமை அமைப்புகள்!

ஒவ்வோர் ஆண்டும், 'வறுமை ஒழிப்பு நாள்' என்று அறிவித்து பிறந்த நாள் விழா எடுத்துவந்த விஜயகாந்த், இந்த ஆண்டு 'பசுமைத் தமிழகம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி எங்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கிறார். 'இதன்மூலம் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு என் நண்பர்கள் 1,000 பேர் (மரக்கன்றுகள்) வீதம் 234 தொகுதிகளிலும் எங்களை நடவேண்டும். நடப்பட்ட என் நண்பர்களைத் தண்ணீர் ஊற்றி ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும்' என்று என் நண்பர்களைத் தூக்கிக்கொடுத்து, தன் கட்சித் தொண்டர்களுக்குக் கோரிக்கைவைத்தார். சுற்றுப்புறச் சூழலுக்காகவும், நீர் மேலாண்மைக்காகவும் 'பசுமைத் தாயகம்' என்கிற ஓர் அமைப்பைத் தொடங்கிக் கடந்த 1995-ம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ். அவருடைய இந்தத் தொண்டைக் கண்டும் நான் மகிழ்கிறேன். 'பசுமை கலாம் திட்டம்' மூலம் என் இன சகநண்பர்களை நட்டுவரும் நடிகர் விவேக், 'எங்களை வளர்க்கும் விழிப்பு உணர்வை மாணவர்கள், கிராமத்து மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். விவசாயம் வளர மழைநீர் தேவை. அதற்கு நாங்கள் தேவை. எங்களை வளர்த்து, வளத்தைப் பெருக்குவீர்' என்று சென்னையில் நடைபெற்ற என்னை நடும் விழா ஒன்றில், அவர் பேசியிருந்தது எங்களுக்குப் பெருமையாய் இருந்தது.

எழுத்தாளர் மீ.ப.சோமு-வின் வியப்பு!

19-ம் நூற்றாண்டில் ஜெகதீஸ் சந்திரபோஸ் என்ற இந்திய விஞ்ஞானி, எங்களுக்குரிய உணர்ச்சி, அறிவு நிலைகளை எடுத்துக்காட்டி மெய்ப்பித்தார். அவற்றைப் பிற விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டனர். 'புல்லும் மரனும் ஓரறிவு இனவே' என எங்களுக்கும் உயிர் உண்டு என்பதைத் தமிழர், தொல்காப்பிய காலத்திலேயே எழுதியுள்ளனர். அத்தோடு, பல்வேறு வகையான காரணப் பெயர்களையும் கொடுத்திருந்தனர். ஒருமுறை, குளிர்பிரதேசமான அயர்லாந்துக்குச்

சென்ற எழுத்தாளர் மீ.ப.சோமு, அங்கிருந்த அரசினர் தோட்டத்தில் அழகாய் வளர்ந்திருந்த என் சகநண்பர்களைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாராம். ‘எப்படி இவைகளை வளர்க்க முடிந்தது’ என்று அந்தத் தோட்டத்தின் தலைவரிடம் கேட்டுள்ளார். ‘பெரிய கொட்டகை போன்ற கூடாரம் அமைத்து அதில் மின்சார விளக்குகளைப் பொருத்தி அவற்றின்மூலம் வெப்பமான சூழலை உண்டாக்கி வளர்த்தேன்’ என்றாராம் அவர். குளிர்பிரதேசம் மிகுந்த அந்த நாட்டில்கூட என்னை வளர்ப்பதற்காக எவ்வளவு சிரமப்பட்டுள்ளார்கள் என்பதை நினைக்கும்போது மிகவும் வியப்பாக இருக்கிறது.

சிந்துவெளி நாகரிகத்தில் வழிபாடு!

பழங்குடி மக்களிடையே பெரும்பாலும் நாங்களே குலமரபுச் சின்னங்களாக இருந்துள்ளோம். மூவேந்தர்களாகிய சேரன் (பனை), சோழன் (அத்தி), பாண்டியன் (வேம்பு) ஆகியோருக்கும் குலமரபுச் சின்னங்களாக இருந்துள்ளோம். சிந்துவெளி நாகரிகத்தில் எங்கள் வழிபாடு இடம்பெற்றுள்ளது. அவர்களின் முத்திரைகளில் என் சகநண்பர்கள் (அரச மரங்கள்) அதிகளவில் இடம்பெற்றுள்ளனர். அசோக சக்கரவர்த்திகூட சாலை ஓரங்களில் எங்களை வளர்க்கச் செய்தார் என வரலாறு குறிப்பிடுகிறது.

பேராசிரியர் டி.எம்.தாஸின் ஆய்வு!

அந்தக் காலத்தில் மக்கள் எங்களை வணங்கி இருக்கிறார்கள். இன்றும் எங்களை வழிபட்டு வருகிறார்கள். சுபகாரியங்கள் அனைத்துக்கும் நாங்கள் பயன்படுகிறோம். வீடு, காடு, கோயில் என என் சகநண்பர்கள் தரம் பிரிக்கப்பட்டோம். ஆல், அரசு, வேம்பு ஆகிய நண்பர்கள் ‘மும்மரங்கள்’ என அழைக்கப்பட்டார்கள். இவற்றுக்குக் கீழேதான் தெய்வப் படங்களைவைத்து மனிதர்கள் வழிபட்டு வருகின்றனர். அதேபோல் மருத்துவத்துக்கும் பயன்படுகிறோம். சித்த மருத்துவத்தில் எங்களைப் பற்றிய பயன்கள் நிறையச் சொல்லப்பட்டிருக்கின்றன. என்னால் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை ஆய்வுசெய்து வெளியிட்டிருக்கிறார் பேராசிரியர் டி.எம்.தாஸ். ‘பல குளிர்சாதன இயந்திரங்கள் ஒருநாள் முழுவதும் தொடர்ச்சியாக இயங்குவதால் ஏற்படும் குளிர்ச்சியை, நான் (ஒரு மரம்) என் நிழல் மூலம் தந்து உதவுகிறேன். ஓர் ஆண்டுக்கு 18 பேருக்குத் தேவையான பிராண

வாயுவை ஓர் ஏக்கரில் உள்ள என் சகநண்பர்கள் தருகிறார்கள்' என்று அதில் தெரிவித்துள்ளார் டி.எம்.தாஸ்.

ஆஸ்திரேலிய அரசின் தடை!

உலக நாடுகளில் எல்லாம் நான் எப்படி வளர்க்கப்படுகிறேன் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் எழுத்தாளர் மாத்தளை சோமு. 'ஆஸ்திரேலியா நாட்டில் என்னை வெட்ட அரசு தடை செய்துள்ளது. வீட்டின் கூரையில் விழுந்துவிடும் என்றாலும் அதை வெட்ட உடனே அனுமதி கிடைக்காது. நிபந்தனையோடுதான் வெட்டப்பட வேண்டும். புதிய வீட்டமைப்புத் திட்டங்களை உருவாக்கும்போது என்னை வெட்டுவதைத் தவிர்த்தே அனுமதி கொடுப்பார்கள். தப்பித்தவறி என்னை வெட்ட வேண்டும் என்றால், அதற்கு ஈடாக என் சகநண்பரை நடவேண்டும். அத்தோடு 10,000 முதல் 15,000 ஆஸ்திரேலிய டாலர் பணத்தைப் பிணைத்தொகையாகக் கட்டவேண்டும். நட்ட என் சகநண்பரின் வளர்ச்சியில் திருப்தி ஏற்பட்டால்தான் அந்தத் தொகை திரும்பக் கிடைக்கும்.

'மரங்களின் மாதா' வங்காரி மாதாய்!

ஜெர்மனி, சுவிஸ், பிரிட்டன், கனடா, நார்வே போன்ற நாடுகளில் எங்களை வெட்ட அனுமதிப்பதில்லை. ஆனால், இவர்களின் தேவைகளுக்கு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வெட்டப்பட்ட என் சகநண்பர்களை இறக்குமதி செய்கின்றனர். ஆப்பிரிக்காவில் என் நடுகையைப் பேரியக்கமாக மாற்றி நோபல் பரிசை வென்றவர் வங்காரி மாதாய். இவர் ஆரம்பித்த 'பசுமைப்பட்டி இயக்க'த்தால் இதுவரைக்கும் கென்யா உட்பட்ட ஆப்பிரிக்க நாடுகளில் என் சகநண்பர்கள் பல கோடிக்கும் மேல் வளர்ந்துள்ளனர். அதனால்தான் லங்காரி மாதாய், 'எங்களின் (மரங்களின்) மாதா' என்று அழைக்கப்படுகிறார்.

திருவண்ணாமலை சம்பவம்!

பசுமையை நேசிக்கும் சுவிட்சர்லாந்து மக்கள், எங்களை அவசியம் வெட்டுவதாய் இருந்தால்கூட பலதடவை யோசித்துதான் முடிவு எடுக்கிறார்கள். தங்களுடைய திருமண, பிறந்த நாட்களின்போதுகூட

நினைவாக எங்களை நடுவதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள்’ என்று கட்டுரையாளர் மாத்தளை சோமு, தன்னுடைய ‘வியக்கவைக்கும் தமிழர் அறிவியல்’ நூலில் என்னைப்பற்றி நிறைய தகவல்களைத் தந்துள்ளார். ஆனால், இங்கே அப்படியா நடக்கிறது? அரசியல்வாதிகள் அவர்களின் பிறந்தநாளின்போது என்னைவைப்பதோடு சரி... அடுத்தநாள் நான் இருக்கிறேனா என்பதைக்கூடப் பார்க்கமாட்டார்கள். அதுபோல் வெட்டுவதற்கு எந்தத் தயவுதாட்சண்யமும் பார்க்கமாட்டார்கள். திருவண்ணாமலையில் இரவோடு இரவாக என் நண்பர்கள் பொக்லைன் இயந்திரங்களால் பிடுங்கி எறியப்பட்ட சம்பவம் மிகக் கொடூரமானது.

உயிர்துறந்த பிஷ்னோய் சமூகத்தினர்!

ராஜஸ்தான் மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் வசிப்பவர்கள் பிஷ்னோய் சமூகத்தினர். இவர்கள் எங்களைப் பாதுகாக்க தம் உயிரையும் ஈந்துள்ளனர் என்பது வரலாறு. 1731-ல் மார்வாரின் மன்னராக இருந்த அபய்சிங், ஜோத்பூர் கோட்டையைக் கட்டுவதற்காக அருகில் உள்ள கேச்சாட்லி கிராமத்தில் இருந்த எங்கள் இன நண்பர்களை (வன்னி மரங்களை) வெட்டி வரும்படி கிரிதாரி தாஸ் ஹக்கீம் எனும் தளபதிக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து, அங்கு சென்ற தளபதிக்கு அம்ருதாதேவி பிஷ்னோய் என்ற பெண் தலைமையில் பலர்கூடி எங்கள் இன நண்பர்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையும் மீறி, அங்கு நின்றிருந்த 363 பேரையும் தாக்கிவிட்டு எங்கள் இன நண்பர்களை வெட்டிச் சென்றார் தளபதி கிரிதாரி. தன் தவற்றை உணர்ந்த மன்னர், அந்தச் சமுதாய மக்களிடம் மன்னிப்புக் கேட்டதுடன் அங்குள்ள எங்கள் இன நண்பர்களைப் பாதுகாப்பதற்கும் உத்தரவிட்டார். இதன் நினைவாக ஒவ்வொரு வருடமும் இந்த இன மக்கள் கேச்சாட்லி கிராமத்தில் கூடி விழா எடுக்கின்றனர். என் இன நண்பர்களைக் காக்க உயிர்துறந்த அம்ருதாதேவியின் பெயரில் மத்திய வனத்துறை அமைச்சகமும், ராஜஸ்தான் மாநில அரசுகளும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கின்றன என்பதும் எங்களுக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம்.

‘பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ பயன் இல்லை!’

என்னை வெட்டினால் எவ்வளவு இழப்புகள் ஏற்படும் என்பதை நன்கறிந்தவர் சுற்றுச்சூழலியலாளர் முகிலன். அவர் எனக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவருகிறார். என்னைப் பற்றி அவர், 'ஒரு மரத்தை வெட்டினால் 10 மரக்கன்றுகளை வைக்கவேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆனால், தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டு இருக்கின்றன. வெட்டப்பட்ட எந்த இடத்திலும் மரங்கள் நடப்படவில்லை. இதற்குப் பொறுப்பு டோல்கேட் நிறுவனத்தினர். இதில், அவர்கள் அக்கறையின்றிச் செயல்படுகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கமும், அதிகாரிகளும் ஆதரவாக உள்ளனர். ஆனால், டோல்கேட் வசூல் மட்டும் கூடிக்கொண்டே இருக்கிறது. மரக்கன்றுகளைவைத்துப் பாதுகாக்கும் நிறுவனங்களுக்கே டோல்கேட் உரிமை வழங்கவேண்டும். உச்ச நீதிமன்றம் சொன்ன எந்த வழிமுறைகளையும் இவர்கள் பின்பற்றுவதில்லை. தண்ணீர் ஊற்றி மரக்கன்றுவைப்பதைப் போன்று படங்கள்தான் வெளிவருகின்றன. ஆனால் தொடர்ந்து அதைப் பராமரிப்பதில்லை. இது ஒருநாள் கூத்து. அரசாங்கத்தில் 65 லட்சம் மரக்கன்றுகள் வைத்ததாகச் செலவுக் கணக்கைக் காட்டுகின்றனர். ஆனால், அடுத்த ஒரு வருடத்தில் இதில், எத்தனை பிழைத்திருக்கின்றன என்று யாரும் சொல்வதில்லை. அத்தோடு, இந்த மண்ணுக்கு ஏற்ற பாரம்பர்ய மரங்களை வைக்காமல், எதற்குமே உதவாத மரங்களை வைக்கின்றனர். இதனால் பறவைகளுக்கோ, மனிதர்களுக்கோ எந்தப் பயனும் இல்லை' என்று தன் ஆதங்கத்தை எங்களுக்காகக் குமுறுகிறார் முகிலன்

.

மரங்களை வளர்க்க வழிமுறைகள்!

என் நலம்விரும்பியான கோவை நாராயணசாமி, 'முதலில் ஒன்றியங்கள்தோறும் சர்வே செய்து கருவேல மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். பிறகு அந்த நிலங்களைச் சீர்செய்ய வேண்டும். மூன்று அடி உயரமுள்ள உள்நாட்டு ரக மரங்களான வாகை, புரசு, அரசம், புளி, வேம்பு, கொன்றை, பன்னீர் பூ, பூவரசு, பனை, செர்ரி, ஆச்சா, சீனி புளி, புங்கன், நாவல், புன்னை போன்ற மரங்களை அதில் நட்டு வளர்த்தால் நல்ல பயன் கிடைக்கும். மேற்கண்ட முறையில் ஒன்றியம்தோறும் சுமார் 50 ஹெக்டேர் நிலத்தில் இதுபோன்று மரம் வளர்த்தால், அந்தப் பகுதியில் 2 டிகிரி முதல் 4 டிகிரி வரை வெப்பம் குறைய வாய்ப்புண்டு. மேலும், ஆண்டுதோறும்


3 செ.மீ மழை கூடுதலாகப் பொழியும். இதைச் செயல்படுத்த ஒன்றியம்தோறும் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள் முதலில் 50 ஹெக்டேர் நிலத்தினை ஒதுக்கீடு செய்ய முன்வர வேண்டும். பிறகு, சமூக ஆர்வலர்களுடன் இணைந்து முதல் ஆண்டில் 20,000 மரங்கள் வளர்ப்பதற்கான நர்சரி கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். ஓர் ஒன்றியத்தில், இதுபோன்ற 10 நர்சரிகளை உருவாக்க வேண்டும். இதன்மூலம் 2 லட்சம் மரங்களை ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யமுடியும்' என்று என்னை வளர்ப்பதற்கான வழிமுறைகளைச் சொல்கிறார்.

என்னுடைய ஆவல் என்னவென்றால், ஒவ்வொரு பள்ளி மாணவர்களிடம் ஒவ்வொரு மரக்கன்றுகளை வழங்கி, பராமரிக்கச் செய்தாலே... அவர்களைப்போல நாங்களும் வளர்வோம்.''

- ஜெ.பிரகாஷ்

குன்றின் மீது தீபம்

https://s-pasupathy.blogspot.com/2021/11/1972-8.html



குன்றின் மீது தீபம்!

சோமு

குன்றின் மீதே எரியுது தீபம்!
குன்றின் உச்சியில் குன்றாமல் நின்று
குன்றின் மேலே எரியுது தீபம்!

நன்றுடை ஒருவன் நல்கிய சேவையோ
நங்கை நல்லாள் ஒருத்தியின் கற்போ
என்றோ எங்கோ எவரோ செய்த
எளியதோர் உதவியை எண்ணிடும் உள்ளமோ
— குன்றின் மீது தீபம்!

வானம் எங்கும் இருண்ட போதும்
வையம் முற்றும் மருண்ட போதும்
கான்வழி சென்று கால்அயர் போதும்
கண்ணும் மனமும் களித்திட ஒளிரும்
— குன்றின் மீது தீபம்!

பக்கத் துன்னார் படையுடன் சாரப்
பகைவர் வந்து பூசல் இழைக்கத்
தக்க தருணம் தாளாமல் வந்து
தகவுடன் ஒருவர் ஊக்கிய சொல்லோ!
— குன்றின் மீது தீபம்!

குலக்கொடி நடத்தும் குடும்பம் போலும்
குடும்பம் துலங்கிடும் குதலையர் போலும்
நலந்திகழ் மனையின் மங்கலம் வளர
நல்கிய தென்புல வேள்வியே போலும்
— குன்றின் மீது தீபம்!

தவறுகள் செய்திடும் மாந்தரை ஆய்ந்து
தண்டனை விதிக்கும் நீதியின் வலிதாய்
தவறுகள் தம்மை உணர்ந்தருள் செய்யும்
தண்ணளி போன்றே தண்ணொளி வீசி
— குன்றின் மீது தீபம்!

என்புடை உடலில் இலங்கும் உயிரோ
ஏதிலார் தமக்கும் இரங்கிடும் கருணையோ
அன்புடை நெஞ்சில் அமர்ந்த இறையோ
ஆன்மச் சிப்பியில் அமைந்த முத்தோ!
— குன்றின் மீது தீபம்!

குமரன் கோவிற் கொடிமர மீது
குறிஞ்சிக் கடவுளின் கொற்றம் விளக்கி
அமர வாழ்வை அவனியில் வழங்கும்
ஆறு முகவன் திருவருள் தானோ!
— குன்றின் மீது தீபம்!


நீல மேகத் தோகையை விரித்து
நிற்கும் குன்றென நிமிர்ந்த மயில்மேல்
கோலச் சுடர்வேல் குளிர்ஒளி வீசக்
குமரன் வந்து குதித்தது போலே
— குன்றின் மீது தீபம்!

குன்றின் மீது சுடரே போற்றி!
குவலய ஞான விளக்கே போற்றி!
குன்றுதோ றாடும் குமரா போற்றி!
குவலய ஞானச் செல்வா போற்றி!



மன்மத மலர்

https://s-pasupathy.blogspot.com/2017/08/796-6.html



"தாளம் எப்படி உன் கையில் ஒரு கருவியாக இயங்குகிறதோ அப்படி வர்ணங்களின் கையில் நீ தாளமாக இயங்க வேண்டும்!" என்றார் அவர். சிவகுமாரனுக்குப் புரியவில்லை. குழப்பத்தோடு நின்றான்.

"புரியவில்லை போலிருக்கிறது. நீ பேசாமல் நான் சொல்கிறபடி எல்லாம் ஆடை அணிந்துகொண்டு நில். பிறகு புரியும் என்றார்," ஓவியர்.

சிவகுமாரன் இதுவரை பழகியறியாத, தனக்குப் புரியாத உலகுக்குள் தாளத்தைக் கீழே வைத்துவிட்டுத் தயக்கத்தோடு புகுந்தான்.

8

வசந்த காலம் என்ற சித்திரத்தை வரையும் பணி தொடங்கிற்று. ரதியும் மன்மதனும் முதன் முதலாகச் சந்தித்து ஒருவரையொருவர் காதலிக்கிற கட்டம். காதலின் அதிதேவதைகள் இருவரும் முதன் முதலாகச் சந்தித்து ஒருவரை ஒருவர் மோகிக்கிற ஆதிக்காதல் அது.

மன்மதனுக்கு அலங்காரங்கள் செய்தார் வித்தியாபதி.

மனோகரமான இளவேனிற் காலத்திலே மன்மதன் பவனி வருகிறான். தென்றலைத் தேராகக் கொண்டு ஏறுகிறான். சோலைப் பசுங்கிளிகள் அந்தத் தேரை இழுத்துச் செல்கின்றன. தேரின் மேல் மீனக்கொடி பறக்கிறது. இருளானது யானைகளின் உருவத்தில் ஒன்று இரண்டு சோலையிலே செல்கிறது. 'மன்மத ராஜன் வருகிறான்' என்று குயில் எக்காளம் ஊதுகிறது. கடல் முரசு கொட்டுகிறது. பூரண சந்திரன் வெண் கொற்றக் குடை பிடிக்கிறான். மங்கையர்கள் காதற் சேனையாகச் சுற்றி மொய்க்கிறார்கள். அந்த வீரத் திருக்குமாரனுக்கு இரு மருங்கிலும் தென்னம்பாளையைக் கவரியாக வீசுகிறார்கள் கன்னிப் பெண்கள். காதல் என்ற பேரிலே மனிதர்களை மட்டுமின்றி இந்த அண்ட பிண்ட சராசரம் அனைத்தையுமே வெற்றி கொள்வதற்காக மன்மதன் ஆயுத சன்னத்தனாகப் புறப்படுகிறான். கையிலே கரும்பு வில். அந்த வில்லிலே பொன்வண்டு நாணாக ஒலிக்கிறது. அம்பறாத் தூணியிலே அரவிந்தம், அசோகு, மாம்பூ, முல்லை, நீலம் என்ற ஐந்து விதமான மலரம்புகள் நிரம்பியிருக்கின்றன. மற்றொரு கையிலே தாழைமடலை வாளாக ஏந்தியிருக்கிறான் மன்மதன்.

இன்பமயமான வசந்த காலத்தில், குளுமையான பௌர்ணமி இரவில் இந்த சுகாநந்தமான பரிவாரங்களோடு மன்மதராஜன் திக்விஜயம் புறப்படுகிறான்.

இதுவரை தேவார திருவாசகங்களைப் பாடித் தாளம் தட்டிக்கொண்டிருந்த சிவகுமாரன், இப்பொழுது இந்த மோகமய மதன உல்லாசத் திருக்கோலத்திலே சுவருக்கு முன்னால் நின்று வடிவம் கொடுத்தான். அவனுக்கு எதிரே எழில் வண்ணத் திருமகளாக உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அலங்காரங்களுடன் சல்லாச் சேலையிலே மேனியைப் பொதிந்து கொண்டு நின்றாள் ஆனந்தவல்லி. வாலிபம் பொங்கிப் புரண்டு கொண்டிருந்தது, அந்த மேனியின் எழில் ஓட்டத்திலே, அந்த விழிகளின் ஒளி வீச்சிலே!

வித்தியாபதி வசந்த காலத்து ரதி மன்மதரின் இன்பக் காட்சிகளை யெல்லாம் படம் படமாகச் சித்திரித்தார், உமாபதி கோவிற் சுவர்களிலே. உண்மையில் இந்தச் சித்திரக் காட்சியின் வரிசை வாரக் கணக்காகத் தொடர்ந்து நடந்தது. காலையில் சூரியோதயத்திலே ஆரம்பிக்கும் பணி சூரியாஸ்தமனம் வரை தினந்தோறும் நடைபெற்றுங்கூட, இந்த மகத்தான வசந்தக் காட்சி வரிசை ஐந்து வாரங்கள் ஆகியும் முற்றுப் பெறவில்லை. நாளுக்கு நாள் புதிய கற்பனை, புதிய உத்சாகம், புதிய சாயல்கள்—இப்படியாக வித்தியா

பாலு பொங்குச்சா? வயிறு வீங்குச்சா?

https://s-pasupathy.blogspot.com/2015/01/2.html



இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துகள் !

பலவருடங்களுக்கு முன் மீ.ப.சோமு `கல்கி'யில் எழுதிய ஒரு கட்டுரையில் பொங்கலைப் பற்றிய ஒரு பகுதி இதோ!



சில பல

மீ.ப.சோமு

இன்பத் திருநாளாகிய பொங்கல் நன்னாளிலே நேயர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னையிலும் மற்ற நவீன நகரங்களிலும் பொங்கல் நன்னாளைப் பல புதிய முறைகளிலே கொண்டாடுகிறோம். தமிழர் திருநாள் என்றும், உழவர் திருநாள் என்றும், காணும் பொங்கல் என்றும், மாட்டுப் பொங்கல் என்றும், சிறு வீட்டுப் பொங்கல் என்றும் அமைப்பதோடு, வள்ளுவர் திருநாளையும் இதையொட்டியே பல இடங்களில் கொண்டாடுவதைப் பார்க்கிறோம். இவ்வயனைத்தும் மகிழ்ச்சிக்கு உரிய மங்கலங்களே!

எனது சிறு வயதில் பார்த்திருக்கிறேன்: கிராமப்புறங்களில் எல்லாக் குடியானவர்களும் அவரவர்களுடைய நிலத்தில் விளைந்ததை, அது சிறுகிழங்கோ (கூர்க்கன் கிழங்கு என்று சென்னையில் இதை அழைக்கிறார்கள்) சேப்பங்கிழங்கோ, சீனிக்கிழங்கு என்ற சர்க்கரை வள்ளிக்கிழங்கோ, கடலையோ எதாவது ஒரு விளைச்சலைக் கூடையிலே எடுத்து வந்து, பண்ணையார்களைக் கண்டு தங்கள் பொங்கற்படியாகிய பரிசைப் பெற்றுப் போவார்கள். நெல்லை மீனாட்சிபுரத்தில் எங்கள் குட்டக்கரை வீட்டில் அந்தக் காலத்தில் பெரிய வெண்கலப் பானையிலே முற்றத்தில் வைத்துப் பொங்கல் இடுவதும், பால் பொங்கும் போது பெண்டுகள் குரவை இடுவதும், அதன் பிறகு கிராமத்து உழவர்கள் வரிசை வரிசையாக வந்து நின்று, பொங்கற்படியைச் செலுத்திவிட்டு அவரவருக்குரிய பரிசப்படிகளைப் பெறுவதும் ஒரு கோலாகலமான காட்சியாக இருக்கும்! இப்போது அங்கேயும் புதிய முறையிலான பழக்கங்கள் பழமையோடு சேர்ந்துள்ளன. எது எதுவானாலும் எப்படியோ ஒரு வடிவத்தில் இந்தத் திருநாள் நாடு முழுவதும் கொண்டாடுவது நமது தமிழகத்தின் சிறப்பு! வேறு மாநிலங்களிலும் சில வேறுபாடுகளுடன் இந்தத் திருநாள் கொண்டாடப்பெறுகிறது!

திருநாளே வேண்டாம் என்று ஒழித்துக் கட்டிவிடாமல், சமுதாயம் என்ற இயந்திரத்திற்கு இவ்வாறு ஆண்டுதோறும் 'ஓவரால்' செய்து, இயந்திர உறுப்புக்களுக்கு எண்ணெய் போடுவது வாழ்வின் இயக்கத்துக்கு உகந்ததே ஆகும்! பண்டிகைகள் இல்லாவிடில், 'சர்வீஸ்' செய்யாத மோட்டார் மாதிரிச் சமுதாய இயந்திரம் கெட்டுவிடும்! அதோடு மக்களுடைய உள்ளமாகிய மின்கலத்துக்கு பாட்டரிக்கு, இப்படி அவ்வப்போது 'சார்ஜ்' செய்து மின்னாற்றலைச் செலுத்திக் கொள்ளவேண்டும். சமுதாயப் பண்டிகைகளின் பொருள் பொதிந்த நோக்கம் இதுவே!

பொங்கல் வாழ்த்து என்னும் வாசக முறை இன்றைக்கு ''வணக்கம்'' என்றும், ''பொங்கல் வாழ்த்துக்கள்'' என்றும் நேரிலோ அல்லது தொலைபேசியிலோ சொல்லுகிற சம்பிரதாயமாக இருக்கிறது. அந்தக் காலத்தில், ஏன், இப்போதும் சில கிராமங்களில், பொங்கல் வாழ்த்துக்கு என்று வழிவழியாக வழங்கி வருகிற ஒரு வாழ்த்து முறை பழக்கத்தில் உண்டு. அதாவது அவரவர்கள் வீட்டிலே பொருள்களைத் துடைத்துப் புதுப்பித்து, வீடுகளைக் கழுவி வெள்ளையடித்து, சமுதாயச் சூழலைத் துப்புரவு செய்து விட்டு, முற்றத்திலே பானை ஏற்றிப் பொங்கல் வழிபாடுகளை முடித்து, அதன் பிறகு மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, பொங்கல் வாழ்த்தை எப்படிச் சொல்லிக் கொள்ளுவார்கள் என்பது ஒரு ரசமான பழைய மரபுத் தமிழ் வாசகம்:

''பாலு பொங்குச்சா?
வயிறு வீங்குச்சா?''

• • •

29

புதுமைப் பித்தன் பற்றி . . .

மீ ப சோமு

https://s-pasupathy.blogspot.com/2014/06/1_30.html

ஜூன் 30. புதுமைப்பித்தனின் நினைவு நாள்.

அவரைப் பற்றி, அவருடைய நெருங்கிய நண்பர், தமிழறிஞர் மீ.ப. சோமு பல கட்டுரைகளில் எழுதியிருக்கிறார். இதோ அவற்றுள் இரண்டை, அவர்கள் இருவரின் நினைவில் இங்கே இடுகிறேன்.



சில பல

கடிதம், ஒரு தொடர்கதை

மீ.ப. சோமு

இந்த வாரம் புதுமைப் பித்தனுடைய கடிதங்களிலிருந்து சில குறிப்புக்களைப் பார்க்கலாம்.

புத்தகங்களுக்குப் பெயர் சூட்டுவது என்றால், அதற்கு முன்பு புதுமைப்பித்தன் மிகமிக ஆழ்ந்து யோசனை செய்வார். அந்தத் தலைப்பிலேயே மையமான ஒரு கருத்து வாசகர்களின் மனத்தில் ஒரு சித்திரமாகப் படர வேண்டும் என்று விரும்புவார். அதோடு எளிதில் யாரும் சொல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று கருதுவார். அவருடைய இந்த இயல்பை உணர்த்தும் பகுதிகள்:—

"உன்னிடமிருந்து (திருச்சியிலிருந்து) வந்த பிற்பாடு பல சோலிகளில் அகப்பட்டு, கடிதம் எழுதுவது கூடத் திருநாளைப் போவான் காரியமாக இன்றுதான் கைகூடியது!

நான் எனது நாடகங்களுக்கு (புகழ் பெற்ற ஆங்கில நாடகங்களின் தமிழ்ச் சுருக்கம்) "உலக அரங்கு" என்ற பெயர் கொடுக்கலாமா என்று நினைக்கிறேன். அல்லது 'நாடகமாடிய கதைகள்' என்ற பெயர் உனக்குப் பிடித்திருக்கிறதா? உனது கருத்தை எழுது. கதைத் தொகுதிக்கு "அயல்நாட்டுக் கதைகள்" என்ற பெயர் நல்லதா அல்லது "மண் படர்ந்த மாண்பு"? —இது எனக்குக் கூடப் பிடிக்கவில்லை. நீ என்ன நினைக்கிறாய்? பெயர் மூலம் ஒரு உருவகம் அமைய வேண்டும். யோசித்து எழுது.

• • •

நமது புத்தகத் தலைப்புக்களைப் போலவே, நெருங்கிய நண்பர்களின் தலைப்புக்களையும் ஆழ்ந்து சிந்தனை செய்வார். நம்மையும் சிந்திக்க வைப்பார். அதற்கு ஒரு சான்று:

"உன்னுடைய கவிதைகள் "மதுக்கிண்ணம்" என்ற பெயரில் அச்சாகி வருகிறது என்று கேள்விப்படுகிறேன். அது நிஜமா? அல்லது நீ முதலில் என்னிடம் சொன்னது போல "இளவேனில்" என்றே பெயர் சூட்டினாயா? நான் இந்த மாசக் கடைசிக்குள் உன் கவிதைகளைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதுகிறேன். அது அச்சாகி வெளிவந்ததும் உனது அபிப்பிராயம் தேவை!

• • •

சென்னையிலிருந்து அவருடைய மனைவி வீடான திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்த புதுமைப்பித்தன் அங்கிருந்து எழுதுகிறார்:—

"இங்கிருந்து சென்னைக்குத் திரும்பி வரும் வழியில் உன்னை ஒரு நாடகத்துடன் திருச்சியில் சந்திப்பேன்.

உனக்கு நேற்று முன் தினம் அவசரத்தில் ஒரு கார்ட் எழுதி, விலாசம் எழுத மறந்து, இன்று என் கைக்கு வந்து விழுந்தது! இந்தக் கடிதத்திற்கு அந்தக் கதி ஏற்படாது!

எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அதைச் சொல்லத்தான் அவ்வளவு அவசரப்பட்டேன்!

இங்கிருந்து உன்னிடம் வரும்போது உன் கைக்கு (சுளுக்கு) மறவாமல் மருந்து (பிண்டத்தைலம்) வாங்கி வருவேன். உபசாரமாகக் கருதாமல் மருந்தை பிரயோகித்துப் பலனைப் பார். கையுடன் விளையாடாதே. நமக்கு அதுவும் அறிவுந்தான் மூலதனம்.

என் பெண்ணுக்கு ஒரு அழகான பெயர் சொல்லு. நான் சொல்லுகிற பெயர்கள் எல்லாம் ரொம்ப 'சீரியஸ்' என்று இங்கே 'ஹோம் டிபார்ட்மெண்ட்' அபிப்பிராயம்! நீ கவிஞன், எனவே சொல்லு. 'பருவதகுமாரி' என்பது மிகவும் நீளமாக இருக்கிறது. வீட்டில் செல்லமாக அழைக்க என்ன பெயர் சூட்டலாம்?

• • •

திருச்சி ரேடியோவின் கிராம நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நான் இரண்டு வாரங்கள் உட்புற கிராமங்களுக்குச் சென்றிருந்தபோது புதுமைப்பித்தன் எழுதிய கடிதத்தில், உரை நடையிலே கேட்பதோடு ஒரு வெண்பாவே எழுதியனுப்பினார்:

"ஏது உன்னிடமிருந்து கடிதமே கிடையாது என்று கேட்பதைவிட, வேலை அதிகமோ என்று கேட்பதில் பொருள் உண்டு.

மி. பா. சோமசுந்தரம்(*மீ பா சோமு) அவர்கள், அக்கரைச்சீமையில் (சாகித்ய அகாடமி விருது* 1962), *கடல் கண்ட கனவு, மற்றும் நந்தவனம் போன்ற படைப்புகளுக்காக அறியப்பட்ட ஒரு புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர், கவிஞர் மற்றும் பத்திரிகையாளர் ஆவார். அவர் கல்கிஇதழின் ஆசிரியராகப் பணியாற்றியதோடு*, பயணக் கட்டுரைகள், நாவல்கள் மற்றும் கதைகளுக்காகவும் அறியப்பட்டார்.

மீ பா சோமு எழுதிய புகழ்பெற்ற நூல்கள்:

- **அக்கரைச்சீமையில் (பயணக்கட்டுரை):** 1962 இல் சாகித்ய அகாடமி விருதை வென்றார்.
- **கடல் கண்ட கனவு (நாவல்):** ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று/புனைவுப் படைப்பு.
- **நந்தவனம் (தொகுப்பு):** வானதி பதிப்பகம் பதிப்பகம்.
- *ரவி சந்திரிகா*: இவரது மற்றப் படைப்புகளிலும் இந்தத் தலைப்பு அடங்கும்.
- **பிற படைப்புகள்:** அவர் ஏராளமான சிறுகதைகள், பாரம்பரியக் கவிதைகள் மற்றும் இசை குறித்த கட்டுரைகளை எழுதியுள்ளார்; பெரும்பாலும் "சோமு" என்ற புனைப்பெயரில் எழுதினார்.

அவருடைய பல படைப்புகள் 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகளாகப் போற்றப்படுகின்றன.

அஞ்சலி

https://s-pasupathy.blogspot.com/2021/01/1777-7.html

கல்கியில் வந்த அஞ்சலி.



அஞ்சலி

மிகச் சிறந்த கலைஞரும் அமரர் கல்கியின் மறைவுக்குப் பின் கல்கி இதழின் ஆசிரியராக இருந்தவருமான மீ. ப. சோமு 15.1.99 அன்று காலமாகி விட்டார். தமிழுக்கு இழப்பு இது.

சோமுவின் மேல் அமரர் கல்கிக்கு அபாரமான பிரியம் உண்டு., தாம் எழுதவிருக்கும் கதைகள் பற்றி அவர் சோமுவிடம் 'டிஸ்கஸ்' பண்ணுகிற விதமே அலாதி.

திருநெல்வேலியில் டி.கே.சியின் 'வட்டத் தொட்டி' சபைக்கு அடிக்கடி செல்வார் அமரர் கல்கி. நெல்லையில் சுலோசனா முதலியார் பாலம் என்றொரு பாலம் வெகு பிரசித்தம். கீழே தாமிரபரணி சலசலக்க, மேலே தென்றல் தவழ, அந்தப் பாலத்தின் மேல் உலாவியபடியே தம் மனத்தில் தோன்றிய கதையை சோமுவிடம் விவரிப்பார் கல்கி.

'தம்பி, தம்பி' என்று அன்புடன் விளித்து, 'இங்கே தொடங்குகிறேன். இப்படிக் கொண்டு போகிறேன், இங்கே சஸ்பென்ஸ்' 'என்று விரிவாகக் கதையைச் சொல்லி, இறுதியில் 'இப்படி முடிச்சுடறேன் தம்பி' என்று முற்றிலும் எதிர்பாராத ஒரு கிளைமாக்ஸைச் சொல்லி முத்தாய்ப்பு வைப்பார் கல்கி.

சோமுவின் இலக்கிய ரசனை மிக உயர்வானது. சமகாலச் செய்திகளின் அடிப்படையில் தம் கதைகளை அமைக்கவே அவர் விரும்புவார்.

சிறந்த கவிஞராக மட்டுமின்றி ஆன்மிகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார் அவர். அவரது பல கதைகளில் இதன் எதிரொலி இருக்கும். சித்தர் பாடல்களுக்கு உரை எழுதியது இவர் தமிழுக்குச் செய்த முக்கியப் பணி.

சோமு அவர்களின் இசை ரசனை – அவரது கவியுள்ளம் போலவே மிக உயர்வானது. சங்கீதப் பரம்பரையில் வந்தவர் அவர்.

'சாரங்கி' என்றொரு இசைக் கருவியைக் கையாள்வதில் அவரது முன்னோர்கள் பெரும் விற்பன்னர்களாக இருந்தவர்கள் அக்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில்களில் சாரங்கி வாசிப்பு இருந்திருப்பதாகவும் தம் தந்தையார் காலத்துக்கு முன்பு அது வழக்கொழிந்து போய் விட்டதையும் சொல்லி வருத்தப்படுவார்.

இசையையும் கவிதையையும் விடச் சற்று அதிகமாக அவர் நேசித்தது – அமரர் கல்கி அவர்களையும் அவரது எழுத்தையும் தான்.

கல்கி அமரராகி ஒரு வருடம் ஆகியிருந்த சமயம். 'சரித்திர புருஷர்' என்றொரு கட்டுரை எழுதினார் மீ.ப. சோமு.

அப்போது அந்தத் தலைப்புக்கு வந்த எதிர்ப்பைப் பார்க்க வேண்டுமே!

'எப்படி இதுபோல் ஒரு தலைப்பு வைக்கலாம்? அப்படியென்ன சாதனை புரிந்து விட்டார் கல்கி?' என்ற கூக்குரல்கள் கிளம்பின.

இன்றைக்குக் கல்கி நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்படும் கோலாகலத்தைப் பார்க்கும்போது சோமுதான் எத்தனை தீர்க்கதரிசனத்துடன் அப்படியொரு தலைப்பைச் சூட்டினார் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.


— ஆனந்தி

"கல்லறை மோகினி" என்பது சாகித்ய அகாதமி விருது பெற்ற பிரபல தமிழ் எழுத்தாளர் மீ.ப. சோமசுந்தரம் (மீ.ப. சோமு) எழுதிய புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்றாகும். மீ.ப. சோமு அகில இந்திய வானொலியில் பணியாற்றியவர், பத்திரிகையாளர் மற்றும் பல கவிதை, நாவல், சிறுகதை தொகுப்புகளை எழுதியவர்.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** மீ.ப. சோமு (1921-1999).
- **வகை:** சிறுகதை தொகுப்பு.
- **படைப்பாளி:** இவர் "சித்தர் இலக்கியச் செம்மல்" என்று போற்றப்பட்டவர், சிக்கனம்பாறை கண்ணப்ப சுவாமிகளிடம் ஆன்மிகப் பயிற்சி பெற்றவர்.
- **விருதுகள்:** மீ.ப. சோமு 1962-ல் சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.

"கல்லறை மோகினி" என்பது தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சிறுகதை உலகில் நன்கு அறியப்பட்ட தலைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.



மீ.ப. சோமு (மீனாட்சிபுரம் ப. சோமசுந்தரம்) தொகுத்த 'புதுமைப்பித்தன் சிறுகதைகள்' நூல், நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான புதுமைப்பித்தனின் தேர்ந்தெடுத்த படைப்புகளைக் கொண்ட ஒரு முக்கிய தொகுப்பாகும். நேஷனல் புக் டிரஸ்ட்

(National Book Trust) வெளியிட்ட இந்த நூல், புதுமைப்பித்தனின் யதார்த்தமான, சமூக விமர்சனம் கொண்ட சிறுகதைகளை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

நூல் பற்றிய முக்கிய தகவல்கள்:

- **தொகுப்பாசிரியர்:** மீ.ப. சோமு, புதுமைப்பித்தனின் நெருங்கிய நண்பர் மற்றும் தமிழறிஞர்.
- **சிறப்பு:** புதுமைப்பித்தனின் எழுத்துக்களில் உள்ள நையாண்டி, சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் மனித உறவுகளைப் பிரதிபலிக்கும் சிறந்த கதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.
- **பங்களிப்பு:** புதுமைப்பித்தனின் இலக்கியப் பங்களிப்பை ஆவணப்படுத்துவதில் மீ.ப. சோமுவின் இந்தத் தொகுப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.
- **மீ.ப. சோமுவின் பிற பணிகள்:** இவர் சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் மற்றும் வானொலியில் தலைமைத் தயாரிப்பாளராகப் பணியாற்றியவர்.

புதுமைப்பித்தனின் கலைப்படைப்புகளை அறிந்துகொள்ள, இந்தத் தொகுப்பு ஒரு மிகச்சிறந்த தொடக்கப் புள்ளியாகக் கருதப்படுகிறது.

காணொளிகள்

01] Akkarai Seemaiyile | அக்கரைச் சீமையிலே | மீ.ப.சோமு | இராச.இளங்கோவன் | சாகித்ய அகாதமி | Aran Tamil

https://www.youtube.com/watch?v=qYFIVWXKw2s [1:04:04]

1962 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்ற மீ.ப.சோமுவின் அக்கரைச் சீமையிலே நூலைப் பற்றி திரு. இராச.இளங்கோவன் அவர்கள் சிறப்புரை.

அரண் தமிழ் அறக்கட்டளையும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழும் இணைந்து நடத்தும் நவீன இலக்கியங்கள் குறித்தான சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்களை வாசகனின் பார்வையில் - 1955 முதல் 2019 வரையிலான சாகித்ய அகாதமி பரிசு பெற்ற 60 நூல்களும் 2019 இல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருது பெற்ற ஒரு நூலும் எடுத்துகொள்ளப்பட்டு நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

(😊)(😊) மீ ப சோமு (😊)(😊)